விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 26 சனிக்கிழமை (11.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 266

## செப்ரெம்பர் 21ஆம் திகதிக்குப் பின்னர்
# நாட்டை கட்டுப்பாடுகளுடன் திறப்பது தொடர்பில் ஆராய்வு

### ஜனாதிபதி பணிப்புரை விடுத்ததாக சவேந்திர சில்வா தெரிவிப்பு



*(கொழும்பு)* ஊரடங்குச் சட்டத்தினை 21ஆம் திகதிக்கு பின்னர் நீக்க வேண்டுமாயின் அதன்பின்னர் நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டுப்பாடுகள் தொடர்பிலான பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## 131 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)
இலங்கையில் ஒரே நாளில் கொரோனாத் தொற்றினால் 131 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
குறித்த மரணங்கள் நேற்று முன்தினம் 15

மீசாலை கிழக்கில்
## மயங்கி விழுந்த பெண் மரணம்

(சாவகச்சேரி)
தென்மராட்சிமீசாலை கிழக்கு பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஆலயத்தில் வழிபாட் 15

# 21ஆம் திகதி வரை ஊரடங்கு நீடிப்பு
### ஜனாதிபதி கோட்டா அறிவிப்பு



(கொழும்பு)
**நாட்டில் தற்போது அமுலிலுள்ள தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டம் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற வீடியோதொழில்நுட்பம் ஊடான கோவிட் ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.
தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தின் 15

## ஐ.நாவுக்கு சம்பந்தன் அனுப்பிய கடிதத்தை ஏற்கவில்லை
### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(கிளிநொச்சி)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐ.நாவுக்கு அனுப்பிய கடிதம் தொடர்பிலும் அதிலுள்ள விடயங் 15

100 மாணவர்களுக்கு குறைந்த
## 3 ஆயிரம் பாடசாலைகளை திறப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)
கிராமப் புறங்களில் உள்ள 100க்கும் குறைந்தளவான மாணவர்கள் எண்ணிக்கையை கொண்ட 3 ஆயிரம் பாடசாலைகளை முதற்கட்டமாக திறப்பது தொடர்பாக கோவிட் தடுப்புச் செயலணிக் கூட்டத்தின்போது ஆராயப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் 15

நாட்டில் மேலும்
## +2,882 பேருக்கு தொற்று

(கொழும்பு)
நாட்டில் நேற்று மேலும் 2,882 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளதாகஇராணு 15

## இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்த இளம் தாய் கொரோனாவால் பலி
### யாழ்.இணுவிலில் சோகம்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்த இளம் தாய் ஒருவர் கொரோனாத் தொற்றால் பரிதாபமாக உயிரிழந்தார்.
இதில் இணுவிலைச் சேர்ந்த அஜந்தன் இனியா (வயது-25) என்ற 15

தெல்லிப்பழையில்
## ஒரு வயது குழந்தை கோவிட்டால் மரணம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.தெல்லிப்பழை வைத்திய 15

காரைநகரில் திருமணமொன்றில் பங்குபற்றிய
## 13 சிறுவர்கள் உட்பட 34 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் காரைநகரில் ஊரடங்குவேளை பந்தல் அமைத்து நூறுக்கும் அதிகமானோர் கலந்துகொண்டிருந்த திருமண நிகழ்வில் பங்கேற்ற 13 சிறார்கள் உட்பட 34 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
யாழ் .போதனா 15

## வடக்கில் 'டெல்டா' தாண்டவம்

(யாழ்ப்பாணம்)
இலங்கையில் 95.8 சதவீத கோவிட் தொற்றுக்கள் டெல்டா வைரஸால் ஏற்படுவது உறுதி 15

புலிகளின் போர்க்குற்றத்தை
## விசாரிக்க வேண்டுமென தமிழ் அரசுக் கட்சி கோரவில்லை
### எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு



03ஆம் பக்கம் பார்க்க

**உடனடி வேலைவாய்ப்பு!**
**தொழிற்சாலை ஊழியர்கள்**
**(Factory labours)**

**Royal Flour Mills (Pvt) Ltd**
கைத்தொழில் பேட்டை
அச்சுவேலி - யாழ்ப்பாணம்

எமது தொழிற்சாலையில் நிலவும் தொழிற்சாலை ஊழியர் (Factory labours) பதவி வெற்றிடத்திற்கு கடின வேலை செய்யக்கூடிய ஆர்வமுள்ளவர்கள் கீழே உள்ள தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு (7882)
**074 190 8551**


# பருத்தித்துறையில் கோவிட்டால் உயிரிழந்தவரின் சடலம் மல்லாவிக்குச் சென்றது எப்படி?

## விசாரணைக்கு நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறையில் கடந்த 2ஆம் திகதி உயிரிழந்த வயோதிப் பெண்ணுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில் அவருடைய சடலத்தை மல்லாவி வைத்தியசாலை பிரேத அறைக்கு அனுப்பியதுடன் பிரேத அறையில் கடந்த 9ஆம் திகதிஇரவு சீல் வைக்கப்பட்ட உடலம் பிரிந்து பார்க்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, மல்லாவியை நிரந்தர முகவரியாகவும் அல்வாய் வடக்கு மத்தி பருத்தித்துறையினை தற்காலிக முகவரியாகவும் கொண்ட வயோதிப பெண் உயிரிழந்த நிலையில் அவரின் பிள்ளைகள் மல்லாவியில் வசித்துவருகின்றார்கள் (அரச உத்தியோகத்தர்கள்). இந்நிலையில் மல்லாவியில் வசித்துவரும் அரச உத்தியோகத்தரான உயிரிழந்தவரின் மகனின் வீடு கொரோனாத் தொற்றினால் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் பருத்தித்துறையில் உயிரிழந்த பெண்ணின் உடலம் எவ்வாறு மல்லாவி மருத்துவமனைக்கு வந்தது? என்ன காரணத்திற்காக கொண்டுவரப்பட்டது? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

அவ்வாறு கொண்டுவரப்பட்ட சடலம் சுகாதார நடைமுறைகளை மீறி, எந்த அனுமதியும் இல்லாமல் பொலித்தீன் சீல் உடைக்கப்பட்டு சடலம் பார்வையிடப்பட்டிருக்கும் நிலையில்,

குறித்த சம்பவம் மல்லாவியில் பெரும் சர்ச்சையினை ஏற்படுத்தியுள்ளதுடன் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவரின் உடல் மல்லாவி வந்தமை, உடல் பொலித்தீனால் சீல் வைக்கப்பட்ட நிலையில் அது உடைக்கப்பட்டு சடலத்தினை பார்வையிட்ட சம்பவம் தொடர்பில் மல்லாவிபொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவந்துள்ளதுடன் வழக்குப் பதிவும் செய்துள்ளார்கள்.

சடலத்தினை மல்லாவி பிராந்திய சுகாதார பிரிவினர் பொறுப்பெடுத்துத் தகனம் செய்யுமாறும் யாழிலிருந்து சடலம் எவ்வாறு மல்லாவிக்கு கொண்டு வரப்பட்டது என்றும் சடலம் உறவினர்களால் திறக்கப்பட்டமை தொடர்பிலும் உரிய விசாரணைகளை மேற்கொண்டு உரியவர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் நீதவான் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.(ம-03)

## இத்தாலி சென்றடைந்தார் பிரதமர் மகிந்த

ஜி-20 சர்வமத மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இத்தாலிக்கு விஜயம் மேற்கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட இலங்கைத் தூதுக் குழுவினர் நேற்று பிற்பகல் அந்நாட்டின் போலோக்னா குக்லியெல்மோ மார்கோனி விமான நிலையத்தை சென்றடைந்தனர். (ம-03)

# மரண அறிவித்தல்



தோற்றம் 07 - 10 - 1937 மறைவு 10 - 09 - 2021

**செல்லத்துரை சுப்பிரமணியம்** (JP)

( ஓய்வுபெற்ற நில அளவை அத்தியட்சகர், முன்னாள் தலைவர் - வண்ணை சாந்தையம்பதி ஸ்ரீ [illegible] விநாயகர் தேவஸ்தானம், யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி பழைய மாணவர் மன்றம், உத்தரவுபெற்ற நில அளவையாளர் சங்கம், வடமாகாணம் முன்னாள் உறுப்பினர் - பிரதேச செயலக பிரிவு [illegible] சபை, யாழ்ப்பாணம் )

இல. 424/01/01, கில்னர் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சுப்பிரமணியம் நேற்று (10.09.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை அம்மான் - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் திருஞானசம்பந்தர் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பாக்கியலட்சுமியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற தனபாலன் (பாபு, பாபுஜி), சந்திரகாந்தன் (காந்தன் - ஜேர்மன்), ஸ்ரீகாந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடமாகாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயசித்திரா (சுதா), சேது ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்மிகா, கிறேசான், கம்சிகா, துத்சன், அகிசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான அரியநாயகம், பரமேஸ்வரி, நடராஜா, நகுலேஸ்வரி மற்றும் பாலசுப்ரமணியம் (ஜெய கிருஷ்ணா ஜுவெல்லறி), தியாகராஜா (ராசன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.09.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 424/01/01, கில்னர் லேன், யாழ்ப்பாணம்.
தகவல்:- சு. சிறீகாந்தன் (ராஜா மகன்) 077 902 4056

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கிருஸ்ணவேணி ராஜா
அவர்களின் அன்பு மாமனார்
அமரர்
**பரமு கனகலிங்கம்**
அவர்கள் கடந்த 08.09.2021 (புதன்கிழமை) அன்று இறைபதமடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



(C-2637)

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா / உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 18.02.1933 மறைவு 09.09.2021

எமது பாடசாலையின் முன்னாள் ஓய்வுநிலை ஆசிரியை
**அமரர் புவனேஸ்வரி இராஜேந்திரன்**
( பூபதி ஆசிரியை )
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பாடசாலை
ஞான வைரவப் பெருமானை வேண்டிநிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(7854)

பழைய மாணவர் சங்கம்
யா / கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை

# 23 ஆம் ஆண்டு நினைவில்...

1998.09.11 குண்டுவெடிப்பில் பலியானோர்



அமரர் பொன். சிவபாலன் (சட்டத்தரணி, முன்னாள் யாழ். மாநகர சபை முதல்வர்)



திரு. மா. ஈஸ்வரன் (பொறியியலாளர்)



திரு. சு. பத்மநாதன் (பதில் ஆணையாளர்)



திரு. பொ. பத்மராஜா (தட்டெழுத்தாளர்)



திருமதி மல்லிகா ராஜரட்ணம் (வரைபடக் கலைஞர்)

மக்களை விசுவாசமாக நேசித்தவர்களை நாம் என்றும் மறவோம்!

தங்க. முகுந்தன்
முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர் ( TULF )
077 727 9238
மூளாய்
(C 2638)

# மோசமான மனித உரிமை மீறல்களை கடுமையாக ஆய்வு செய்ய வேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை இலங் கையின் மோசமான மனித உரிமைகள் நிலைமையை கடுமையாக ஆய்வு செய்து உண்மையான முன்னேற்றங்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கேட்டுக் கொண்டுள்ளது.**



எதிர்வரும் கூட்டத்தொடரில் அரசாங்கத்தின் தொடர்ச்சியான துஷ்பிரயோகங்கள் மற்றும் சட்டத்தின் ஆட்சி பலவீனமடைவது குறித்து எச்சரிக்கையை வெளிப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் இலங்கை அரசாங்கத்தின் சர்வதேச மனித உரிமை கடமைகளை நிறைவேற்றுவதற்கான அழுத்தத்தை கொடுக்க தங்கள் விருப்பத்தை மற்ற நாடுகள் வெளிப்படுத்த வேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் தொடர்ச்சியான சர்வதேச கவனமும் அழுத்தமும் சிறுபான்மை சமூகங்கள், ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர் எதிர்கொள்ளும் அபாயங்களைக் குறைக்க உதவும் என்றும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாஷி கங்குலி தெரிவித்தார்.

அத்தோடு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கில் சிறுபான்மையினரை கைது செய்து அவர்களை அச்சுறுத்தும் செயற்பாட்டை அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# தமிழ் மக்களுக்காக பயணிக்கும் நாம் ஒருபோதும் பிரிந்து செயற்படோம்

## புலிகளின் போர்க்குற்றத்தை விசாரிக்க வேண்டுமென தமிழரசுக் கட்சி கோரியதென்பது பொய்

### மறுக்கிறார் சுமந்திரன்



(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் குற்றங்களையும் விசாரிக்க வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சி ஒருபோதும் ஐ.நா அலுவகைத்திற்கு கடிதம் அனுப்பவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 2012-ஆம் ஆண்டிலிருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பானது இலங்கையில் தமிழ் மக்கள் மீது அரசினால் மேற்கொள்ளப்பட்ட போர் குற்றங்களுக்கு நீதி கோரி உலக நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக ஒரு தீர்மானத்தை கொண்டு வந்திருக்கின்றோம்

புலிகளால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களையும் விசாரிக்க கோரி சம்பந்தனால் ஒரு ஆவணம் அனுப்பப்பட்டதாக தற்போது விஸமப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. அது முற்றிலும் ஒரு பொய்யான விடயம் இந்த விடயத்தில் ஊடகங்களும் பொறுப் புணர்வோடு செயற்பட வேண்டும்

தமிழரசுக்கட்சி தனியாகச் செயற்படப்போகிறது கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செயற்படுகிறது என தற்போது ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

அவ்வாறான ஒரு சம்பவம் இடம் பெறாது எந்த காலத்திலும் இலங்கை தமிழரசுக் கட்சியானது தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படுமே தவிர ஒருபோதும் தனித்து செயற்படாது.

நாங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஒற்றுமையாக செயற்படுகின்றோம் எனினும் கூட்டாகச் செயற்படும் போது பல பிரச்சனைகள் முரண்பாடுகள் ஏற்படும் ஆனால் தமிழ் மக்களுக்காக பயணிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பிரிந்தோ அல்லது தனித்தோ செயற்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5-33-101)

## பதவி விலகும் மத்திய வங்கி ஆளுநர்



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியிலிருந்து அடுத்த வாரம் தாம் விலகுவதாக பேராசிரியர் டபிள்யூ.டீ. லக்ஷ்மன் தெரிவித்துள்ளார். (நி-5)



தமிழீழ விடுதலைப் புலிகளின் புகலிடமாக விளங்கிய புலவர் புலமைப்பித்தனுக்கு நாடு கடந்த அரசாங்கத்தால் புலிக்கொடி போர்த்தி உயரிய மரியாதை செய்யப்பட்டது.

# ஐ.நா பொதுச் சபை அமர்வில் ஜனாதிபதி கோட்டாபய

(கொழும்பு)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 76 ஆவது அமர்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துக் கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள குறித்த அமர்விலேயே ஜனாதிபதி கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# ஒட்சிசன் பயன்பாட்டில் வீழ்ச்சி

## சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள மருத்துவமனைகளில் ஒட்சிசன் பயன்படுத்தப்படும் அளவு கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் தற்போது குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்திருப்பதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பான இணையவழிக் கூட்டத்தில் கலந்துகொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள அமைச்சர், கடந்த காலங்களில் நாளொன்றில் பயன்படுத்தப்பட்ட ஒட்சிசனின் அளவு சில சந்தர்ப்பங்களில் 140 தொன் வரையிலும் அதிகரித்ததாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகத் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் மற்றும் தடுப்பூசி வழங்கல் பணிகள் காரணமாக வைரஸ் பரவல் ஒப்பீட்டளவில் முன்னரை விடவும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் அவர், வைரஸ் பரவலை முழுமையாக இல்லாதொழிப்பதற்கு அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)


# கண்ணீர் அஞ்சலி

மலர்வு- 21.02.1939 உதிர்வு- 07.09.2021

யா/ கோண்டாவில் இந்துக்கல்லூரியின் ஆசிரியர்
திருமதி.குமுதினி இராஜேந்திரன்
அவர்களின் அன்புத்தாயார்



அமரர்.திருமதி.
**அமுதலிங்கம் குணரத்தினம்மா**
(ஓய்வு பெற்ற ஆசிரியர் யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி)

அவர்கள் 07.09.2021 அன்று இறையடி சேர்ந்தார். அன்னாரின் குடும்பத்தினரின் பிரிவுத் துயரில் பங்கு கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி

# கொரோனா தொற்றால்
# இந்தியா-இங்கிலாந்து டெஸ்ட் ரத்து!



இந்தியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மான்சஸ்டரில் உள்ள ஓல்டு டிரபோர்டு கிரிக்கெட் மைதானத்தில் இந்தப் போட்டி நடக்கவிருந்தது.

இந்திய அணி நிர்வாகத்தைச் சேர்ந்த சிலருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டு உள்ளதாக தெரிகிறது.

இது குறித்த அதிகாரப்பூர்வ தகவலை வெளியிட்டு இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம், "5வது டெஸ்ட் போட்டி ரத்து செய்யப்படுகிறது. இதன் மூலம் ரசிகர்களுக்கு மிகப் பெரிய ஏமாற்றம் இருக்கும் என்பதை அறிகிறோம்.

எனவே மன்னிப்பு கேட்டுக் கொள்கிறோம். இதுகுறித்த மேலும் தகவல்களை விரைவில் தெரிவிப்போம்" என்று தெரிவித்துள்ளது. (4)

## ஆப்கான் அணித்தலைவர் பதவியிலிருந்து ரஷித் விலகல்



இருபது-20 உலகக்கிண்ண தொடருக்கான ஆப்கானிஸ்தான் அணி அறிவிக்கப்பட்ட சில நிமிடங்களில் ஆப்கானிஸ்தான் அணியின் தலைவர் பதவியை ரஷித் கான் இராஜினாமா செய்துள்ளார்.

உலகக்கிண்ண தொடருக்கான அணி அறிவிக்கப்படும் போது அணித்தலைவர் என்ற முறையில் தேர்வுக் குழுவினர் தன்னிடம் ஆலோசனை நடத்தியிருக்க வேண்டும். ஆனால், தன்னிடம் கலந்து ஆலோசிக்காமலேயே அணி தேர்வு செய்யப்பட்டுள்ளதால் அணித்தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக ரஷித் கான் தெரிவித்துள்ளார்.

ரஷித் கான் அணித்தலைவர் பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, ஆப்கானிஸ்தான் அணியின் புதிய அணித்தலைவராக முகமது நபி செயல்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (4)

## இருபது-20 உலக கிண்ணம் மே.தீவுகள் அணி அறிவிப்பு

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகவுள்ள 2021 ஐ.சி.சி. ஆண்கள் இருபது-20 உலகக் கிண்ணத்துக்கான 15 பேர் கொண்ட அணியை மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அறிவித்துள்ளது.

இந்த அணியில் 2016 இருபது-20 உலகக் கிண்ணத்தின் இறுதிப் போட்டியின் இறுதி ஓவரில் பென் ஸ்டோக்ஸின் ஓவருக்கு தொடர்ச்சியாக நான்கு சிக்ஸர்களை விளாசி, கிண்ணத்தை அணிக்காக பெற்றுக் கொடுத்த பிராத்வைட் இடம்பெறவில்லை.

இருப்பினும், 36 வயதான ராம்பல் ஆறு வருடங்களுக்குப் பிறகு முதல் முறையாக மேற்கிந்திய தீவுகள் இருபது-20 அணிக்கு திரும்பியுள்ளார். அணியில் இணைத்துக் கொள்ளப்பட்ட மற்றொரு குறிப்பிடத்தக்க வீரர் ரோஸ்டன் சேஸ் ஆவர்.

முதல் முறையாக மேற்கிந்தியத்தீவுகள் தேசிய அணிக்கு இருபது-20 அழைப்பினை பெற்றுள்ள அவர், கரீபியன் பிரீமியர் லீக்கில் அனைவரதும் கவனத்தையும் ர்த்தார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணி கீரான் பொல்லார்ட் (தலைவர்), நிக்கோலஸ் பூரன் (உப தலைவர்), ஃபேபியன் ஆலன், டுவைன் பிராவோ, ரோஸ்டன் சேஸ், ஆண்ட்ரே பிளெட்சர், கிறிஸ் கெய்ல், ஷிம்ரான் ஹெட்மியர், எவின் லூயிஸ், ஓபேட் மெக்காய், லெண்டல் சிம்மன்ஸ், ரவி ராம்பல், ஆண்ட்ரே ரசல், ஓஷேன் தாமஸ் மற்றும் ஹேடன் வால்ஷ்.

மேலதிக வீரர்கள் டேரன் பிராவோ, ஷெல்டன் கோட்ரெல், ஜேசன் ஹோல்டர், அகீல் ஹொசைன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (4)

## அமெரிக்க ஓபன் டென்னிஸ் இறுதிக்கட்டத்தை எட்டியது




விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்று வந்த அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடர், இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

இதன்படி தற்போது பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன.

முதலாவது பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டியில், பிரித்தானியாவின் எம்மா ரடுக்கானுவும் கிரேக்கத்தின் மரியா சக்கரியும் பலப் பரீட்சை நடத்தினர்.

பரபரப்பாக நடைபெற்ற இப் போட்டியில், 6-1, 6-4 என்ற நேர் செட் கணக்குகளில் எம்மா ரடுக்கானு வெற்றிபெற்று முதல் முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இரண்டாவது பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டியில், கனடாவின் லேலா அன்னி பெர்னாண்டசும், பெலராஸின் ஆரினா சபாலெங்காவும் மோதினர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், 7-6, 4-6, 6-4 என்ற செட் கணக்குகளில் லேலா அன்னி பெர்னாண்டஸ் வெற்றிபெற்று முதல் முறையாக இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றார்.

எவ்வாறாயினும் இம்முறை அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில் இளம் வீராங்கனையொருவர் சம்பியன் கிண்ணம் ஏந்தவுள்ளமை உறுதி. (4)

# மெஸ்ஸி ஹெட்ரிக்
## பொலிவியாவை தோற்கடித்தது ஆர்ஜென்டினா

2022 ஃபிபா உலகக் கிண்ண தகுதிச் சுற்றுப் போட்டியில் பிரேசிலுடனான போட்டியின் வியத்தகு இடைநிறுத்தத்திற்கு பின்னர் ஆர்ஜென்டினா பொலிவியாவை 3-0 என்ற கணக்கில் தோற்கடித்தது. கோபா அமெரிக்கா சாம்பியன்கள் ஃபிபா உலகக் கிண்ண தகுதிச் சுற்றில் தங்கள் இடத்தை வலுப்படுத்த வியாழக்கிழமை நடைபெற்ற தகுப் போட்டியில் தங்கள் எதிரிகளை இலகுவாக தோற்கடித்தனர்.

இந்த ஆட்டத்தில் ஆர்ஜென்டினா அணித் தலைவர் லியோனல் மெஸ்ஸி ஹெட்ரிக் கோல் அடித்தார்.

அவரது 77, 78 மற்றும் 79 ஆவது கோல்கள் அவரது தேசிய தரத்திற்கான ஏழாவது ஹெட்ரிக் சாதனையாக பதிவானதுடன், பிரேசில் ஜாம்பவான் பீலேவின் சாதனையையும் முறியடிக்கப்பட்டது. (4)



# இராசிபலன்

11.09.2021
ஆவணி 26, சனிக்கிழமை
பஞ்சமி முன்னிரவு 10.23 மணிவரை
சுவாதி பிற்பகல் 2.44 மணிவரை
சுபநேரம் 3.03-4.33 மணிவரை
இராகுகாலம் 9.03-10.33 மணிவரை
சந்திராஷ்டமம்: ரேவதி, அச்சுவினி
அமிர்தசித்தம்
சர்வதேச முதல் உதவி தினம் — வளவன்


**மேஷம்**
உறவினர்கள் நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான சம்ப வங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


**ரிஷபம்**
பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.


**மிதுனம்**
சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் கூடும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


**கடகம்**
தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள்.


**சிம்மம்**
நண்பர்களால் வளர்ச்சி கூடும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், செய் தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


**கன்னி**
வார்த்தைகளில் நிதானம் தேவை, செயற் பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், தேக நலனில் புத்துணர்வு பெறுவீர்கள்.


**துலாம்**
குடும்பத்தில் பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பது நல்லது, தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.


**விருச்சிகம்**
கடவுளை வழிபட்டு காரியம் தொடர வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், உறவினர்களின் சந்திப்பு உண்டு, சுபவிரயங்கள் கூடும் நாள்.


**தனுசு**
விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உண்டாகும், அதிஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு.


**மகரம்**
பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், புதிய முயற்சிகள் எளிதில் கைகூடும், செய்தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும்.


**கும்பம்**
இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் கூடும், தொழில் சம்மந்தமான புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.


**மீனம்**
குடும்பத்தினரிடம் கோபமாக பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், பிரயாண பயமுண்டு, வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள்.

உன் எதிர் பார்க்காத அன்பு உனக்கு எதிர்பாராத பயணைத் தரும்

# சட்டவிரோத செயற்பாடுகள் குறித்த தகவல்களை பொலிஸாருக்கு தெரியப்படுத்துங்கள்

## பொலிஸ்மா அதிபர் வேண்டுகோள்

**(கொழும்பு)**

**சமூகத்தில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் தகவல்களை பொலிஸாருக்கு தெரியப்படுத்துங்கள். தகவல்களை வழங்குபவர்களின் இரகசிய தன்மை பேணப் படும் என பொலிஸ்மா அதிபர் சி.டீ.விக்கிரமரத்ன தெரிவித்தார்.**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் தெரிந்தால் அதனை எவ்வித அச்சமும் இன்றி குற்ற புலனாய்வு திணைக்களத்திற்கு வழங்குமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், போதைப் பொருள் தொடர்பிலும் விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொலிஸாருக்கு சகல விடயங்கள் தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு தகவல்களே தேவைப்படுகின்றன. எனினும் தகவல்களை பொலிஸாருக்கு வழங்கினால் தகவல்களை வழங்குபவர்கள் தொடர்பில் தவறிழைப்பவர்களுக்கு அறிவிக்கப்படும் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் தகவல்கள் வழங்குபவர்கள் தொடர்பான இரகசிய தன்மை பேணப்படும் என்று உறுதியளிக்கின்றோம்.

இவ்வாறு தகவல்களை வழங்குவதற்கு 1997 மற்றும் 119 என்ற இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு வழங்கப்படும் தகவல்கள் தொடர்பான இரகசிய தன்மை பேணப்படும். எனவே சமூகத்தில் இடம்பெறுகின்ற சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்பில் தகவல்களை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அவர் தெரிவித்தார். ( நி-5)

# மரண அறிவித்தல்

## இரத்தினதுரை பகவதியம்மா



**பிறப்பு** - 1940.12.08
**இறப்பு** - 2021.09.08

பணிப்புலம் பண்டத்தரிப்பை சேர்ந்த இரத்தினதுரை பகவதியம்மா 8.9.2021 புதன் கிழமை அன்று காலமானார். அன்னார் காலம் சென்ற சோமசுந்தரம் (Shroff) செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும். காலம் சென்ற செல்லத்துரை சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகளும். காலம் சென்ற இரத்தினதுரை (ஓய்வுபெற்ற தபாலதிபர்-சுழிபுரம் தபால் நிலையம்) அவர்களின் அன்பு மனைவியும். Dr பஞ்சாட்சரம் (லண்டன்) அவர்களின் அன்புச் சகோதரியும் Dr ஞானேஸ்வரி (லண்டன்), இராசலட்சுமி, உருத்திரசிங்கம்(கனடா), அமரர் பூபாலசிங்கம், அமரர் மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும். கலாமதி, சுமதி (கனடா), கோமதி(கனடா), Capt.ரகுபதி(Master Mariner-அவுஸ்திரேலியா-பழைய மாணவன் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி), அகிலன் (B.Eng-கனடா-பழைய மாணவன் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி), இந்துமதி (B.A, B.E.D ஆசிரியை-பண்ணாகம் அ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் அன்பு தாயாரும். மனோகரன் (ஓய்வுநிலை உத்தியோகத்தர், சிமெந்து கூட்டுத்தாபனம்-காங்கேசன்துறை), இளங்கீரன் (கனடா), தருமலிங்கம் (கனடா), யாழினி (அவுஸ்திரேலியா), சிவஜா (optician), யாதவன்(B.A, M.A, Excise Inspector-Point Pedro) ஆகியோரின் அன்பு மாமியாரும். பரிசித் (HVAC Technician), தர்சிகா (B.A, M.A), குமரன் (B.A), துவீபன் (B.A), நஸானின் (Acc.Dip.), நிறோசிகா (Juris Doctor), திவோஷன் (B.Com), ஆரபி(B.Sc.), அபிரா (Faculty of Medicine- Australia), ரொனால்ட் ஓகஸ்ட்ஸ் (Uni-அவுஸ்திரேலியா), தீரன், யானன், நிலன், மாதங்கி, சேயவன், சௌமியன் ஆகியோரின் பேத்தியும். சகானா,கார்த்திக் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 11.9.2021 சனிக்கிழமை யாழ் கோம்பயன் இந்து மயானத்தில் நடைபெற்று அஸ்தி 12.9.2021 ஞாயிற்றுக்கிழமை சம்பில்துறை ஜம்புகோளபட்டின ஜம்புநாதேஸ்வரர் புனித தீர்த்தத்தில் கரைக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

பணிப்புலம், பண்டத்தரிப்பு. | தொடர்புகளுக்கு 0776151783 | தகவல், குடும்பத்தினர்.

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தேங்கும் கொவிட் சடலங்கள்

(யாழ்ப்பாணம்)

**பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பிரேத அறையில் கொரோனோவால் மரணமடைந்தவர்களின் சடலங்களை குளிரூட்டியில் வைத்து பேண முடியாத நிலையில் சடலங்கள் தேங்கிகாணப்படுவதால் பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாக வைத்தியசாலை பதில் பணிப்பாளர் வே.கமலநாதன் தெரிவித்துள்ளார்.**



வைத்தியசாலையில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் ,

எமது வைத்தியசாலையில் கடந்த மே மாதம் 17ஆம் திகதி கொரோனோ நோயாளர் விடுதி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 556 பேர் கொரோனோத் தொற்றுக்கு உள்ளாகிசிகிச்சைபெற்றுள்ளனர்.

அவர்களில் 21 பேர் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். 20 பேர் வெளிநோயாளர் பிரிவில் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா தொற்றுக்கு உள்ளாகிய நிலையில் உயிரிழந்தவர்களின் சடலங்களை மின் தகனம் செய்வதற்கு உள்ள நெருக்கடி நிலைமைகள் காரணமாக வைத்தியசாலை பிரேத அறையில் சடலங்கள் தேங்கி காணப்பட்டுகின்றன.

பிரேத அறையில் 6 சடலங்களையே குளிரூட்டியில் வைத்து பாதுகாக்க கூடிய வசதிகள் உள்ள நிலையில் இன்றைய நிலவரப் படி (நேற்றைய நிலவரப்படி)11 சடலங்கள் காணப்படுகின்றன. எதிர்வரும் நாட்களில் மரணங்கள் ஏற்பட்டால் சடலங்களை பாதுகாப்பதில் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

யாழில் ஒரு மின் தகன மயானம் உள்ளது. அதிலையே யாழ். மாவட்டத்தில் கொரோனோ தொற்றுக்கு உள்ளாகி உயிரிழப்பவர்களின் சடலங்கள் எரியூட்டப்பட்டு வருவதனாலேயே சடலங்களை எரியூட்டுவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன.

தாமதங்களை கருத்தில் கொண்டு வெளி மாகாணத்தில் உள்ள மின் தகன மயானங்களுக்கு சடலங்களை கொண்டு சென்று எரியூட்டுவதற்கு உயிரிழந்தவர்களின் உறவினர்கள் முன்வரவேண்டும்.

மேலும் வீட்டில் உயிரிழந்தவர்களுக்கு கொரோனோ தொற்று உறுதியானால் உறவினர்கள் வைத்தியசாலைக்கு அறிவித்தால், அது தொடர்பினான நடவடிக்கைகளையும் வைத்தியசாலை பொறுப்பெடுக்கும்.

அவர்கள் வசதி குறைந்தவர்கள் எனில் நோயாளர் நலன்புரி சங்கத்தின் ஊடாக , தியாகி அறக்கொடையை தொடர்பு கொள்ள முடியும் அவர்கள் அனைத்து செலவீனங்களை பொறுப்பேற்றுக்கொள்வார்கள்.

எனவே மக்கள் தமக்கு சளி , தடிமன் , காய்ச்சல் உள்ளிட்ட அனைத்து நோய்களுக்கும் பயமின்றி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வந்து சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் வைத்திய தேவைகள் உள்ளிட்ட தேவைகளுக்கு வைத்தியசாலையின் பொது தொலைபேசி இலக்கங்களான 021 226 3261 மற்றும் 021 226 3262 ஆகிய இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ள முடியும் என தெரிவித்தார். (4-7-33-60)

## கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள Zoom செயலிஊடான கொவிட் 19 தொற்றபாயம் மற்றும் நாடளாவிய முடக்கம் என்பவற்றினால் சாத்தியமாகக் கூடிய உளம் சார் பிரச்சினைகள் தொடர்பிலான இளைஞர் யுவதிகளுக்கான கருத்தமர்வுகள் எதிர்வரும் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் காலை 9-12 மணி வரை முறையே "பெரும் தொற்றுக்கான மன ஆரோக்கியம்" மற்றும் "இளையோரும் திறன் விருத்தியும்" எனும் தலைப்புக்களில் வைத்திய கலாநிதி சி.சிவதாசனால் (மனநிலை மருத்துவநிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை) நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பங்குபற்றும் இளைஞர்களுக்கு பங்கு பற்றுதலுக்கான சான்றிதழ் வழங்கப் படும்.

குறித்த நிகழ்விற்கான மேலதிக விபரங்கள் மற்றும் இணைப்புக்கள் என்பவற்றை அமைச்சின் இணையத்தள முகவரி http://edumin.np.gov.lk மற்றும் facebook page// https://www.facebook.com/youthnorth ஊடாகப் பார்வையிட முடியும்.

மேலும் தொடர்ச்சியாக இடம் பெறவுள்ள கருத்தமர்வுகள் மற்றும் பயிற்சிகள் போன்றவற்றின் விபரங்கள் உரிய காலத்தில் இவ் இணையங்களில் காட்சிப் படுத்தப்படும் என ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (4-7)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம் பெற்று வரும் இறை ஆசிவேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவ ஸ்ரீ நாகேந்திர சிவாகரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-7)

## மோ. சைக்கிள்-சைக்கிள் விபத்து ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி-மீசாலை-மடத்தடிப் பகுதியில் ஏ9 வீதியில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மடத்தடிப் பகுதியைச் சேர்ந்த 66வயதான நபர் ஒருவரே தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சிறு காயங்களுக்கு இலக்காகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-7-30)

## அறநெறிச்சாரம் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பிரதிசனிக்கிழமை தோறும் காலை 8.00 மணிமுதல் 9.00 மணிவரை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தென்றல் அலைவரிசையில் இடம்பெற்று வரும் அறநெறிச்சாரம் நிகழ்ச்சியில் இன்று காலை 8.00 மணிக்கு மகாகவி பாரதியாரின் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு "பாரதியின் எண்ணங்கள் - நம் வாழ்வுக்கான வண்ணங்கள்" எனும் தலைப்பில் கருத்துரை நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது.

மாணவர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றி கேட்கப்படும் கேள்விக்குப் பதில் எழுதிப் பரிசில்களை வெல்ல முடியும் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. (4-7)

## அரங்க கதையாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் இணைய வழி அரங்க கதையாடல் நிகழ்வில் கதையாடல் 14 நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348261

கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்புவிடுத்துள்ளனர். (4-7)

## ஊரடங்கில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

**தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலப்பகுதியில் யாழ். மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்த்தி உரிமையாளர் சங்க அலுவலகத்தில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.**

கடந்த மாதம் 31 ஆம் திகதி அலுவலகத்திற்கு சங்க தலைவர் வந்து பார்த்த வேளை குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது தெரிய வந்தது.




இத்திருட்டுச் சம்பவத்தில் ஒரு இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ததையடுத்து மேற்கொண்ட விசாரணையில் திருட்டில் ஈடுபட்டவர்கள் இனங்காணப்பட்டு திருடப்பட்ட பொருட்கள் சில மீட்கப்பட்டன.

ஏனைய பொருட்களையும் மீட்பதற்கான நடவடிக்கை முன்னெடுப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-7)



அசெம்பிளீஸ் ஓவ் கோட் ஓவ் சிலோனால் யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்கள் பராமரிப்புத்தேவைகளுக்காக ஒரு தொகைப்பணம் வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது.

# தற்போது பதிவாகும் தொற்றுக்கு டெல்டா திரிபே காரணம்

## ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக ஆய்வாளர்கள்

**(கொழும்பு) —**

**நாட்டில் தற்போது பதிவாகும் புதிய கொவிட் தொற்றுக்கு, 95.8 % டெல்டா கொவிட் திரிபே காரணம் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.**

இம்மாதத்தின் முதல் வாரத்தில் நாட்டின் வெவ்வேறு மாகாணங்களி லிருந்து பெறப்பட்ட வெவ்வேறு வகை யான கொவிட் திரிபு பீ.சி.ஆர் மாதிரிகளை கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக த்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் மரபணு உயிரியல் பிரிவின் ஆய்வா ளர்களான பேராசிரியர் நீலிகா மாலவிகே, வைத்தியர் சந்திம ஜீவந்தர உள்ளிட்ட குழுவினர் இந்த ஆய்வினை மேற் கொண்டிருந்தனர்.

அதற்கமைய, மேல் மாகாணத்தில் பதிவாகும் புதிய தொற்றுக்கு 100% டெல்டா திரிபே காரணமாகிறது என ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டு ள்ளது.மேலும், ஏனைய, மாகாணங் களில் பதிவாகும் புதிய கொவிட் தொற்று களுக்கு 84 முதல் 100 % வரை டெல்டா திரிபே காரணம் என்றும் கண்டறிய ப்பட்டுள்ளது. (நி-5)

# தேசிய கைதிகள் தினத்தன்று ரஞ்சன் விடுவிக்கப்படுவார்

## சஜித் நம்பிக்கை

(கொழும்பு)

தேசிய கைதிகள் தினத்தன்று ஐக்கிய மக்கள் சக்தி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்படுவார் என்று நம்புகிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

நாளை தேசிய கைதிகள் தினமாகும். "கைதியும் ஒரு மனிதனே" என்று அறியப் பட்டாலும் பல சிறைச்சாலைகளில் கைதிக ளின் நிலை பரிதாபகரமானதே. சிறைச் சாலைகளின் கொள்ளவுகளை விட (107% ஐ விட) அதிகளவில் சனநெரிசல் நிரம்பியுள்ளதோடு உள்ளக பௌதீக பிரச்சனைகள் எண்ணற்றது.

சிறைச்சாலை என்ற எண்ணக்கரு விற்கு பதிலாக திருத்த மையங்கள் என்ற எண்ணக்கருவை நோக்கி உலகம்நகர்ந்து கொண்டிருக்கிறது.இது குறித்து கவ னம் செலுத்துவது மிகவும் முக்கியம் எனவும் தனது டுவிட்டர் பதிவில் சஜித் பிரேமதாச பதிவிட்டுள்ளார். (நி-5)


# பணிநயப்பும் 60வது அகவை நிறைவு வாழ்த்துக்களும்




யா/ குடமியன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை சிரேஷ்ட ஆசிரியர்

திருமதி. மகேஸ்வரி தனபாலசிங்கம்

(SLTS -1, sp.Trd.primary)

ஆரம்ப இடைநிலைக் கல்வி - யா/ மிருசுவில் அ.த.க. பாடசாலை

உயர் கல்வி - யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

சேவை விபரம்

| | |
|---|---|
| யா/ மிருசுவில் அ.த.க பாடசாலை | 01.02.1993 - 02.02.1997 |
| கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை | 03.02.1997 - 04.01.1999 |
| யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை | 05.01.1999 - 04.01.2011 |
| யா/குடமியன் அ.த.க. பாடசாலை | 05.01.2011 - 10.09.2021 |

ஆசிரியர் சேவையில் அரும் பணியாற்றி 10.09.2021 இல் ஓய்வு பெற்று இன்று 11.09.2021 60 வது அகவை நிறைவு காண்கின்ற தங்களை அகமகிழ்ந்து வாழ்த்துவதுடன் தங்களின் ஓய் வுகாலம் சிறப்படையவும் வாழ்த்துகின்றோம்.

(7875) ஆசிரியர் நலன்புரிச் சங்கம் யா/ குடமியன். அ.த.க. பாடசாலை. வரணி


# மகிந்தவின் கோட்டைக்கு பைசர்

## சதி என்கிறார் முருத்தெட்டுவே

(கொழும்பு)

மகிந்தவின் கோட்டை என அழைக் கப்படும் அம்பாந்தோட்டை பகுதிக்கு பைசர் கொவிட் தடுப்பூசி விநியோகிப்பது ஒரு சதி என்று நாரஹேன்பிட்டி அபயராம தலைமை அறங்காவலர் முருத்தெட் டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிட்ட போதே இதை குறிப்பிட்டார். தொடர்ந்து தெரிவிக்கையில், உண்மையில், யாரோ ஒருவர் வேண்டுமென்றே ஜனாதிபதி மற்றும் நாமல் ராஜபக்ஷவுக்கு புள்ளிக ளைப் பெற்றுக் கொடுக்க முயல்கின்றனர். எனி னும் பிரதமருக்கான புள்ளிகளைப் பெற வேலை செய்யவில்லை என்றும் குறிப்பிட்டார்.

அம்பாந்தோட்டையில் மட்டும் கொரோனா இல்லை. தற்போது அனை வருமே பாதிக்கப்படும் போது அம்பாந் தோட்டைக்கு மட்டும் பைசர் சென்றது எப்படி?

அவர்கள் அங்கு ஒரு விமான நிலை யம் இருப்பதாக சொல்கிறார்கள். அப்படி என்றால் கொழும்பிலும் விமான நிலை யம் உள்ளது.கொழும்பைக் கடந்து சென் றது எப்படி? கொழும்பை சீனாவுக்குக் கொடுத்த பிறகு அம்பாந்தோட்டைக்கு பைசர் ஏன் கொடு க்க வேண்டும்? என அவர் கேள்வி எழுப்பினார்.

இதன் பின்னணியில் ஒரு இரகசியம் அல்லது சதி இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது என்றும் அவர் தெரி வித்தார். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

### விரதங்கள்

## துன்பங்களைப் போக்கும் புரட்டாதி சனிக்கிழமை



**நேத்திர தரிசனம்**

கலியுகக் கடவுள் எனப் போற்றப்படும் திருப்பதி வெங் கடாசலபதி 12 அடி உயர முள்ளவராகக் காட்சி தருகி றார்.

மூலவர் விக்கிரகம் சிவப்புக் கல் வகையைச் சேர்ந்த சாளக் கிரா மத்தால் உருவாக்கப் பட்டது. இவரை வியாழக் கிழமைகளில் தரிசிப் பது மிகவும் நல்லது.

எளிமையான தோற் றத்துடன் மெல்லிய பட் டாடைகளுடன் கூடிய திருநாமம் சாற்றப் பெற்று அருள் பாலிக் கின்றார். எனவே அவர் கண்கள் குளுமையான தரிசனம் கொடு க்கும். இந்தத் தரிசனத்தை நேத் திர தரிசனம் என்பார் கள்.

இந்தத் தரிசனத்தைக் காண்பவர்களுக்கு எந் தளவு கடுமையான கஷ் டங்கள் இருந்தாலும் திருவேங்கடவனின் அருட்பார்வையால் அனைத்தும் நீங்கி வள மான வாழ்வு அமையும்.

(தொடரும்)

# பொருட்களின் விலைகள் குறையவில்லை அவசரகால விதிகளை மீளப்பெறுங்கள்

## ஐ.தே.க சாடல்

(கொழும்பு)

அவசரகால விதிகள் பிரகடனப்ப டுத்தப்பட்டு ஒரு வாரம் கடந்துள்ள நிலை யில் எந்தவொரு உணவு பொருளினதும் விலையையும் அரசாங்கத்தால் குறைக்க முடியாமல் போயுள்ளது.எனவே அதனை மீளப்பெறுவதே தற்போது பொருத்தமான நடவடிக்கையாகும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் ருவன் விஜே வர்தன தெரிவித்தார்.

களஞ்சியசாலைகளில் சீனி பதுக்கி வைக்கப்பட்டிருப்பதால் அதன் விலை அதிகரிக்கவில்லை. மாறாக சீனியை இறக்குமதி செய்வதற்கு வர்த்தகர்களிடம் டொலர் இன்மையே அதன் விலை அதிகரிப்பிற்கு காரணமாகும் என்றும் ருவன் விஜேவர்தன சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடைபெற்ற இணையவழி கலந்துரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்தார். (நி-5)

# இரட்டைக்கோபுர தாக்குதல் தினத்தில் தலிபான்கள் பதவியேற்பு?

(காபூல்)

**அமெரிக்காவில் இரட்டை கோபுர தாக்குதல் நடத்தப்பட்ட செப்., 11ஆம் திகதியான இன்று பதவியேற்க, தலிபான் தற்காலிக அரசு திட்டமிட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரி விக்கின்றன.**





அமெரிக்காவில் 2001. செப்., 11இல் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அதன் 20ஆவது ஆண்டு அனுஷ்டிக்கப்பட உள்ளது.அதே நாளில் புதிய அரசு பதவியேற்பு விழாவை நடத்த, தலிபான்கள் திட்டமிட்டுள்ளனர்.

இது குறித்து தலிபான் மூத்த தலைவர்கள் கூறியுள்ளதாவது:அமெரிக்காவுக்கு சங்கடத்தை ஏற்படுத்துவதற்காக இந்த நாளை தேர்ந்தெடுக்கவில்லை. எங்களைப் பொறுத்தவரை அது மிக முக்கியமான நாள்.பிரதமராக பதவியேற்க உள்ள முல்லா முகமது ஹசன் அகுந்த் மற்றும் பல அமைச்சர்களின் பெயர்கள், அமெ ரிக்காவின் சர்வதேச பயங்க ரவாதிகள் பட்டியலில் உள்ளது எங்களுக்கு தர்மசங்கடமாக உள்ளது.

அதேபோல ஹக்கானி அமைப்பும் அமெரிக்காவின் கறுப்புப் பட்டியலில் உள்ளது. தோஹாவில் செய்த ஒப்பந்தத்தின்படி அமெரிக்கா, இவர்களது பெயர்களை கறுப்பு பட்டியலில் இருந்து நீக்க வேண்டும்.என அவர்கள் கூறியுள்ளனர்.பதவியேற்பு விழாவுக்கு சீனா, கட்டார், ரஷ்யா, ஈரான், துருக்கி போன்ற நாடுகளை அழைக்கவும் தலிபான்கள் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. (7-4)

## நிபா வைரஸிற்கான சிறப்பு விடுதி

(மதுரை)

கேரளாவில் கொரோனா பரவல் அதிகரித்து வரும் நிலையில் அங்கு நிபா வைரஸும் பரவத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில், மதுரை ராஜாஜி அரசு வைத்தியசாலையில் 'நிபா' வைரஸ் காய்ச்சலுக்கு சிகிச்சை அளிக்க சிறப்பு விடுதி அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 50இற்கும் மேற்பட்ட படுக்கை வசதி கொண்ட சிறப்பு விடுதி அமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வைத்திய சாலை மருத்துவர் நடராஜன் கூறுகையில், மாவட்டத்தில் தற்போது நிபா வைரஸ் பாதிப்பு இல்லை.ஆனால் நிபா வைரஸ் பாதிப்பை எதிர் கொள்ளத் தயாராக இருக்கிறோம். அனைத்து படுக்கைகளிலும் வென்டிலேட்டர் மற்றும் ஆக்ஸிஜன் ஆகியவை பொருத்தப்பட்டுள்ளது" என்று கூறினார். (7-4)

## சிறப்புத் திட்டத்தின் கீழ் 12,000 பேருக்கு குடியுரிமை

(பாரிஸ்)

பிரான்ஸ் நாடு, 12,000இற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்களுக்கு சிறப்புத் திட்டம் ஒன்றின் கீழ் பிரெஞ்சுக் குடியுரிமை வழங்கியுள்ளது.

நாடு கடுமையான கொரோனா காலகட்டத்தை சந்தித்த நேரத்தில், களத்தில் முன்னணியில் நின்று கொரோனாவை எதிர்த்துப் போராடியதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில், அவர்களுக்கு பிரெஞ்சுக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக பிரான்ஸ் அரசு தெரிவித்துள்ளது.

ஒருவர் பிரான்சில் ஐந்து ஆண்டுகள் வாழ்ந்த பிறகே குடியுரிமைக்கு விண்ணப்பிக்க முடியும் என்று விதி இருக்கும் நிலையில், சிறப்புத் திட்டத்தின்படி, அத்தியாவசிய பணியில் இருப்போர் இரண்டு ஆண்டுகள் பிரான்சில் வாழ்ந்த நிலையில் குடியுரிமை கோரி விண்ணப்பிக்கலாம்.

அதனடிப்படையில் சிறப்புத் திட்டம் ஒன்றின் கீழ் விண்ணப்பித்த 16,000 பேரில் 12,012 பேருக்கு குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (7-4)

## ஊழியர்களை தடுப்பூசி போடுமாறு கட்டாயப்படுத்த வேண்டும்

### ஜோ பிடனின் அதிரடி அறிவிப்பு

(வோஷிங்டன்)

நூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட அனைத்து தொழில் நிறுவனங்களும் தங்கள் ஊழியர்களை தடுப்பூசி போடுமாறு கட்டாயப்படுத்த வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் கேட்டுக்கொண்டுள்ளார்.

அல்லது வாரந்தோறும் கொரோனா சோதனை மேற்கொண்ட சான்றிதழை சமர்ப்பிக்கவும், மறுப்பு தெரிவிக்கும் நிறுவனங்கள் கடுமையான அபராதம் செலுத்த நேரிடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிடன் நிர்வாகத்தின் இந்த அதிரடி அறிவிப்பால் சுமார் 100 மில்லியன் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றே தெரியவந்துள்ளது.

நிர்வாக உத்தரவை ஒவ்வொரு முறை மீறும் தொழில் நிறுவனங்களுக்கு தலா 14,000 டொலர் அபராதம் விதிக்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது. இதுவரை சுமார் 80 மில்லியன் அமெரிக்க மக்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளவில்லை என்றே தெரிய வந்துள்ளது.

ஆனால் 177 மில்லியன் மக்கள் முழுமையாக தடுப்பூசி போட்டுக்கொண்டுள்ளனர். இருப்பினும் பாதிப்பு எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்தே காணப்படுகிறது.

இதனால் முழுமையாக தடுப்பூசி போட்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் தொடர்பிலும் பிடன் நிர்வாகம் ஆலோசனை மேற்கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது. (7-4)

## ஜி- பிடன் இடையில் முதல் உரையாடல்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் நேற்று முன்தினம், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்குடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

உலகின் இரு பெரிய பொருளாதார நாட்டுத் தலைவர்களுக்கிடையேயான இந்த நேரடித் தொடர்புகள் கிட்டத்தட்ட ஏழு மாத கால இடைவெளியை முடிவுக்குக் கொண்டுவந்தது என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

பிடன் மற்றும் ஜி ஆகியோர் போட்டி மோதலில் சிக்காமல் இருப்பதை உறுதி செய்ய இரு நாடுகளின் பொறுப்புகளை பற்றியும் இதன்போது விவாதித்துள்ளனர்.

வோஷிங்டனுக்கும் பீஜிங்கிற்கும் இடையிலான உறவுகள் பல தசாப்தங்களில் மிகக் குறைந்த நிலையில் உள்ளன, மேலும் பிடன் ஜனவரி மாதம் ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு இருவருக்கும் இடையில் இடம்பெற்றுள்ள இரண்டாவது அழைப்பு இதுவாகும். (7-4)

## பள்ளி குழந்தைகளுக்கு தடுப்பூசி கட்டாயம்

(லாஸ் ஏஞ்சல்ஸ்)

உலக அளவில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கையில் அமெரிக்கா முதல் இடத்தில் உள்ளது. இதனை முன்னிட்டு அந்நாட்டு மக்களுக்கு தடுப்பூசி போடும் பணிகளை பிடன் தலைமையிலான அரசு தீவிரப்படுத்தி உள்ளது.

இந்த நிலையில், அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட வேண்டியது கட்டாயம் என அறிவிக்கப்பட்டு உள்ளது. அதன் பின்னரே அவர்கள் பள்ளிக்கூடங்களுக்கு செல்வதற்கான அனுமதியை பெறுவார்கள். (7-4)

# மருத்துவ ஆலோசனை தேவைப்படுமிடத்து பொது வைத்தியசாலையை நாடுங்கள்

## வவு.பொது வைத்தியசாலை பணிப்பாளர்

**(நெளுக்குளம்)**

**வவுனியா மாவட்டத்தினை சேர்ந்த நோயாளர்கள் தமது சிகிச்சைகளை பெறுவதற்கு எவ்வித தயக்கமுமின்றி வவுனியா பொது வைத்தியசாலையை நாடமுடியுமென வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க. ராகுலன் தெரிவித்தார்.**

வவுனியா பொது வைத்தியசாலைக்கு செல்வதனால் அன்டியன் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்ற அச்சம் காரணமாக வெளிநோயாளர்கள் பிரிவில் சிகிச்சை பெறக்கூடியவர்கள் கூட வைத்தியசாலைக்கு செல்ல பின்னடிப்பதாக கிடைத்த தகவல் தொடர்பாக வினவிய போதே அவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

தற்போதைய கொரோனா கடுந்தொற்றிலிருந்து மக்களையும் நோயாளரையும் பாதுகாப்பதற்கு, தொற்றை முற்கூட்டி அடையாளப்படுத்துதலும் விரைவான உடனடி சிகிச்சையை உறுதிப்படுத்துதலும் அத்தியாவசியமானதாகும்.

கடும்சுவாச சிக்கலுடன், நாட்பட்ட நிலையில் சிகிச்சை பெற வைத்தியசாலைக்கு வரும் கொரோனா நோயாளர் களுக்கே சிகிச்சை பலனின்றி போகும் சாத்தியம் அதிகம் என்பதுடன் மரணத்தையும் ஏற்படுத்த வல்லது என்பது விஞ்ஞான பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஏலவே கடும் சமூக பொருளாதார நெருக்கடிக்கு உட்பட்டுள்ள வவுனியா பிராந்திய மக்கள், வைத்திய சேவைக்காக எந் நிலையிலும் மாவட்ட பொது வைத்தியசாலையை நாடலாம் என தெரிவித்த அவர், வைத்தியசாலையானது மக்களின் சுகாதார தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு மேலாக சமூக அபிவிருத்தி, பொருளாதார முன்னேற்றம் மற்றும் சூழல் பாதுகாப்பு போன்றவற்றின் ஆதாரமாக செயற்பட வேண்டியது அவசியமானது என தெரிவித்தார்.

வெளிநோயாளர் பிரிவில் சாதாரணமாக சிகிச்சை பெறகூடிய நிலை காணப்படுகின்றது.

எனவே, கொரோனா நோயாளர்களோ அல்லது கொரோனா அல்லாத பிற நோயாளர்களோ மருத்துவ ஆலோசனை தேவைப்படுவதாக உணருமிடத்து, தயக் கமின்றியும், தாமதமின்றியும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசா லையை உடனடியாக நாடுமாறும் அறிவுறுத்தினார். (7-4-299)

# அம்பலவன்பொக்கணையில் சட்டவிரோத மணல் அகழ்வு

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் அம்பலவன் பொக்கணை கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் மற்றும் பனையடி பிரதேசத்திலும் பாரிய அளவில் மணல் அகழ்வு நடைபெறுகின்றன.

அதிகாலை நேரங்களில் கடற்கரை பகுதிக்கு அண்மையில் உழவு இயந்திரங்களில் ஏற்றி அதன்பின் டிப்பர் ரக வாகனங்களில் பரிமாற்றம் செய்யப்பட்டு இராணுவ சோதனை அல்லாத வீதிகளால் கொண்டு செல்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மணல் அகழ்வால் அம்பலவன் பொக்கணை பிரதேசம் பாரிய அழிவை நோக்கி சென்றுகொண்டிருப்பது வெளிப்படுத்துகின்றது. மணல் அகழ்வினால் எதிர்கால சந்ததியினர் இப்பிரதேசங்களில் வாழமுடியாத சூழ்நிலை உருவாகி வருகின்றது.

சுனாமி போன்ற பேராபத்துக்கள் ஏற்படும் போது கடல் அரிப்பினால் கிராமங்களிற்குள் கடல் நீர் உட்புகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடன் விரைந்து களப் பணி மேற்கொண்டு மணல் அகழ்வை தடுத்து நிறுத்துவதுடன் அம்பலவன்பொக்கணை பிரதேசத்தில் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் பாரிய அழிவையும் தடுத்து நிறுத்துவதுடன் குறித்த விடயத்திற்கு நிரந்தரமான தீர்வை பெற்றுத்தரும்படி பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (7-4-350)



பளை, பரந்தன்,பிரமந்தனாறு, தருமபுரம், கனகாம்பிகைக் குளம் ஆகிய பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 250 குடும்பங்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தினரால் உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்:-கிருஷ்ணகுமார்)

# வனப்பகுதி என தெரிவித்து மக்கள் வாழ்விடங்கள் அபகரிப்பு

## சுமந்திரன் சுட்டிக்காட்டு

(நெளுக்குளம்)

பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் நேற்று வவுனியா தமிழரசுக் கட்சி அலுவலகத்திற்கு வருகை தந்திருந்தனர்.

இதன்போது வவுனியாவில் பொதுமக்களின் காணிகளை வனவளதிணைக்களத்தினர் எல்லைப்படுத்தப்பட்டு வருவதாக மக்கள் முன்வைத்தகுற்றச்சாட்டு தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,வன பாதுகாப்பு சட்டத்தின் கீழே வன பாதுகாப்புக்குப் பொறுப்பான உயர் அதிகாரிக்கு வனங்களை பாதுகாக்கும் உரிமை உண்டு. ஆனால் அது மக்களுடைய வாழ்விடங்களாக இருந்தாலும் கூட அவர் அதனை செய்யலாம் ஆனால் அவற்றில் சில சில நடவடிக்கைகளை சட்டம் தடுக்கிறது.

ஆனால் இங்கு மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களை இவர்கள் வனப்பாதுகாப்பு என அடையாளப்படுத்திவிட்டு மக்கள் அங்கு வாழ்வதை தடுப்பதற்கான முயற்சிகள் பல இடங்களிலும் நடைபெற்று வருகின்றது.

ஏற்கனவே பொத்துவில் பிரதேசத்திலே இவ்வாறான வழக்கு ஒன்றிலே நான் ஆஜராகி இருக்கின்றேன். அது தற்பொழுது கல்முனை மாகாண மேல் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்றது.

அதே போன்று மற்ற இடங்களிலும் இவ்வாறான பிரச்சினை தொடருமாக இருந்தால் வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய நிலைமைதான் ஏற்படும் எனத் தெரிவித்தார்.

மேலும் ஜெனிவா கூட்டத்தொடர் தொடர்பாக தமிழரசுக் கட்சி எந்தவிதமான கடிதமும் அனுப்பவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பு அதனுடைய தலைவர் சம்பந்தனின் கையொப்பத்தின் கீழே ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது. நாங்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ஒரு கட்சிஅந்த கூட்டமைப்பாக தான் நாங்கள் செயற்பட்டு வருகின்றோம்.

ஏனைய கட்சிகள் வேறாக செயற்பட்டு வருவது தொடர்பாக நாங்கள் அவர்களோடு பேசலாம்.

ஆனால் தமிழரசுக் கட்சியை பொறுத்தவரையில் நாங்கள் கூட்டமைப்பை உடைத்து தனியாகசெயற்படவில்லைஎனத் தெரிவித்தார். (7-4-299)

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்ட இளம் எழுத்தாளரை

## விடுதலை செய்யுமாறு பெற்றோர் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் முசலி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறை பொற்கேணி பகுதியில் நவரசம் எனும் கவிதை நூல் மூலம் தீவிரவாத செயற்பாட்டை ஊக்குவித்தமை தொடர்பான சந்தேகத்தின் பெயரில் கடந்த 2020 மே மாதம் 16 ஆம் திகதி கைது செய்யப்பட்டு ஒன்றரை வருடங்களுக்கு மேலாக சிறையில் தடுத்து வைக்கப்படுள்ள தனது மகனை விடுதலை செய்யுமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

27 வயதான அஹ்னப் பெருவெல ஜாமியா நளிமியா கலைப் பீடத்தில் கலை துறை சார்ந்த பாடம் கற்றும் மதுரங்கு தனியார் பாடசாலையில் தமிழ் ஆசிரியராக பணியாற்றிய நிலையில் 2017 ஆம் ஆண்டு நவரசம் எனும் கவிதை நூலை வெளியிட்டார்.

நவரசம் நூலின் ஊடாக ஒன்பது உணர்வுகளை மையப் படுத்தியும் 45 கவிதைகள் எழுதப்பட்ட நிலையில் அதில் "உருவாக்கு" என எழுதப்பட்ட ஒரு கவிதையை மையப்படுத்தி ஏற்பட்ட சர்ச்சை காரணமாக பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் அஹ்னாப் கைது செய்யப்பட்டு ஒன்றரை வருடங்களுக்கு மேலாக மெஹசீன் CRP சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த கைது தொடர்பாக ஐரோப்பிய பாராளுமன்றம், இலங்கை பாராளுமன்றம் உட்பட பல இடங்களில் பேசப்பட்டாலும் இதுவரை நடைமுறையான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் சிறையில் தனது இளைமையை அஹ்னாப் தொலைப்பதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்

இந்த நிலையில் இம் மாதம் ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல் தொடர்பாகவும் அஹ்னாப்பின் கைது தொடர்பாகவும் WORKING GROUP ON ARBITRARY DETENTION குழுவினால் ஜெனிவா மனித உரிமை கவுன்சிலுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7- 4-285)

# 5 மாதங்களாக பிள்ளைகளை பார்க்கவில்லை சூழ்நிலைகளை புரிந்து அவதானமாக செயற்படுங்கள்

## மக்களிடம் மன்றாட்டமாக கேட்கும் மருத்துவர்

(கொழும்பு)

நாட்டில் கொவிட் தொற்று தொடர்ந்தும் ஓரே நிலையில் இருப்பதனால் சுகாதார துறையினர் மிகவும் சோர்வடைந்துள்ளனர்.

தொடர்ந்து சில மாதங்களாக கொவிட் தொற்றாளர்ளுக்கு நாள் முழுவதும் மருத்துவர்கள் சிகிச்சையளித்து வருகின்றனர்.

இந்த நிலையில் மருத்துவர் ஒருவர் ஊடகத்திற்கு கருத்து வெளியிட்டு தங்களின் நிலையை வெளிப்படுத்தியுள்ளார்.

"மருத்துவர்கள், தாதியர்கள் உட்பட சுகாதார பணியாளர்கள் 5 மாதங்களாக வீடுகளுக்கு செல்லவில்லை. அப்பா வீட்டிற்கு வர மாட்டீர்களா என பிள்ளைகள் தொலைபேசி ஊடாக கேட்கின்றனர்.

அப்போது எங்களுக்கு ஏற்படும் வேதனைகளை வார்த்தைகளினால் கூறி விட முடியாது.

இவ்வாறான சூழ்நிலைகளை புரிந்து மக்கள் அவதானமாக செயற்படுங்கள் என கும்பிட்டு கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ். சிங்கள புத்தாண்டின் போதே இறுதியாக வீடுகளுக்கு சென்றோம். எங்களுக்கும் பிள்ளைகள் உள்ளனர். எனினும் வீடுகளுக்கு சென்று பார்க்க முடியாத நிலைமையிலேயே உள்ளோம்.

அம்மா அப்பாவை பார்ப்பதற்கு கடந்த 6 மாதங்களாக செல்லவில்லை. உண்மையாகவே தற்போது எங்களுக்கும் மிகவும் சோர்வாக உள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)


# சமல் ராஜபக்ஷவுக்கு கொவிட்

(கொழும்பு)

நீர்ப்பாசனத்துறை அமைச்சர் சமல் ராஜபக்ஷவுக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து அவர் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# சுமார் 10 மில்லியன் மக்களுக்கு செலுத்தப்பட்டது தடுப்பூசி




(கொழும்பு)

இலங்கையில் இதுவரை 10 மில்லியனுக்கும் அதிகமானவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி இதுவரை இலங்கையில் மொத்தமாக 1 கோடியே 2 இலட்சத்து 11 ஆயிரத்து 537 பேர் தடுப்பூசிகளின் இரண்டு அளவுகளையும் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# தேசிய பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்பட அரசாங்கம் இடமளிக்காது - கமால்

(கொழும்பு)

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றினை எதிர்த்துப் போராடும் இந்த சூழலில் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட அரசாங்கம் இடமளிக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த கருத்துக்களை முன்வைத்தார்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நாட்டில் புரையோடி காணப்பட்ட பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை விடுவிக்க முடிந்தாலும் கொரோனா தொற்றின் ஊடாக மற்றொரு பாதுகாப்பு அச்சுறுத்தலை நாடு எதிர்கொண்டுள்ளதாக கூறினார்.

இந்நிலையில் தேசிய பாதுகாப்பின் ஸ்திரத்தன்மையிலேயே அபிவிருத்தி தங்கியுள்ளது என்றும் கமால் குணரத்ன தெரிவித்தார். (நி-5)






**ஆர்னா**

சின்ன வயசுல தங்கச்சியோட தாக்குதல்ல இருந்து தப்பிச்ச அனுவபம் கல்யாணத்துக்கு அப்புறம் எப்படி கை கொடுக்குது!



**சஜித்**

விழிப்பதற்கே
உறக்கம்
வெல்வதற்கே
தோல்வி
எழுவதற்கே
வீழ்ச்சி
வாழ்வதற்கே
வாழ்க்கை

**நிருதா**

எல்லோருக்கும் இரண்டு வாழ்க்கை இருக்கு



ஒன்னு வாழுற வாழ்க்கை,
இன்னொன்னு வாழனும்னு
நினைத்து வாழாத வாழ்க்கை

**நிருபினி**




**அஷ்விக்**

கல்யாணம் பண்ணினா உடனே உங்க தோஷம் போயிடும்.

அது என்ன தோஷம்.?



வேற ஒன்னும் இல்லங்க! உங்க சந்தோஷம் தாங்க

**அஹானா**

வாழ்க்கை
நேர்மையாக
உள்ளவர்களை
அழ வைக்கிறது..
நேரத்திற்கு ஏற்ப
மாற்றி பேசுபவனை
வாழ வைக்கிறது.!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இரண்டு தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு 97 வீத பாதுகாப்பு - ஆய்வில் உறுதி

(டில்லி)

**கொவிட் வைரஸ் தொற்றக்கூடியது என்றாலும், தடுப்பூசி செலுத்திக்கொள்வதன் ஊடாக 97 சதவீதம் மரணத்தைத் தடுக்க முடியும் என்று இந்திய ஆய்வொன்று உறுதி செய்துள்ளது.**

இந்திய அரசின் கொவிட் தடுப்பு தொழில் நுட்பக் குழு நடத்திய இந்த ஆய்வின் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டன. கடந்த ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை இந்தியாவில் கொவிட் தொற்று மற்றும் இறப்புகள் பற்றிய தரவை இந்தக்குழு பகுப்பாய்வு செய்துள்ளது. அதனடிப்படையில் முதலாவது தடுப்புசி செலுத்திக் கொண்ட ஒருவர் மரணத்திலிருந்து 96 சதவீதம் பாதுகாக்கப்படுகின்றமை தெரிய வந்துள்ளது. அதே போல் இரண்டு தடுப்புசிகளையும் பெற்றுக் கொண்ட ஒருவர் மரணத்திலிருந்து 97 சதவீதம் பாதுகாக்கப்படுகின்றார். எனவே, தடுப்புசியானது கொவிட் வைரஸிக்கு எதிரான மிக முக்கியமான பாதுகாப்பு கவசமாகும் என்று குறித்த ஆய்வுக்குழு அறிவித்துள்ளது. (நி-5)

# ஒரு பிடி மண்ணையும் தாரைவார்க்க இடமளியோம்

## அரசாங்கத்திற்கு தடாலடி பதில்




(ஹற்றன்)

ஒருபிடி மண்ணையேனும் வெளியாருக்கு தாரைவார்த்துக் கொடுக்க இடமளிக்கமாட்டோம் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அரச பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான 11 ஆயிரம் ஏக்கர் காணியை தனியார் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது எம் பெருந்தோட்ட சமூகத்தை அதளபாதாளத்திற்கு கொண்டு செல்லும் அரசாங்கத்தின் வங்குரோத்து செயற்பாடாகும். இதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. மீறி எவரும் உள்நுழைந்தால் அதன் விளைவு எரிமலை தாக்கத்தை விட பெரிதாக இருக்கும் மலையக பெருந்தோட்ட சமூகத்தின் காணிகளை அபகரிக்க நினைக்கும் எவராக இருந்தாலும் பரவாயில்லை. அதை பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம்.

எம் நிலத்திலிருந்து ஒருபிடிமண்ணை எடுத்துச் செல்ல முற்பட்டாலும் பொறுப்பு வாய்ந்த மக்கள் பிரதிநிதி என்றவகையில் மலையக மக்கள் முன்னணியும் தமிழ் முற்போக்கு கூட்டணியும் தகுந்த நடவடிக்கை எடுக்குமென அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# பதிவினை செய்து விட்டு தடுப்பூசி செலுத்தாமல் சென்றோர் கைது

## புதிய மோசடி அம்பலம்

(கொழும்பு)

தென்னிலங்கையில் கொவிட் தடுப்புசி செலுத்திக் கொள்ளாமல் அதற்கான அட்டையில் பதிவிட்டுச் சென்ற சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி - சங்கமித்தா வித்தியாலயத்தில் தடுப்புசி நிலையத்திற்கு வருகைத் தந்து தடுப்புசி பெறாமல் தடுப்புசி அட்டையில் பதிவிட்டு செல்ல சிலர் முயற்சித்துள்ளனர்.

குறித்த மோசடியாளர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். காலி எத்திலிகொட மற்றும் கொன் கஹ பிரதேசத்தை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தடுப்புசி நிலையத்திற்கு வருகைத்தந்து அட்டையில் மாத்திரம் பதிவிட்டு செல்லும் போது அங்கிருந்த சுகாதார அதிகாரி இது தொடர்பில் பொலிஸாரிடம் தெரியப்படுத்தியுள்ளார். அதன் பின்னர் அவர்களை கைது செய்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5)

# சுற்றுலா மேற்கொள்ள சிறந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை

(கொழும்பு)

பிரபல "ட்ரவல் ப்ளஸ் லைஷர்" சுற்றுலா வழிகாட்டி சஞ்சிகையானது, உலகில் சுற்றுலா மேற்கொள்ளக் கூடிய சிறந்த முதல் 25 நாடுகளின் பட்டியலில் இலங்கையையும் பெயரிட்டுள்ளது.

அமெரிக்காவின் மெரிடித் ஊடக குழுமத்தினால் வெளியிடப்படும் இந்த சஞ்சிகையில், புதிய சுற்றுலா வலயங்களின் பட்டியலில் இலங்கை 24 ஆவது இடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் இலங்கை மற்றும் சீஷெல்ஸ் ஆகிய நாடுகளில் ஒரே இடத்தை பிடித்துள்ளன. (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## காலம் போற்றும் கதிர்கள்

ஒரு சோதனைச் சாலைக்குள்ளே ஒருத்தர் உட்கார்ந்திருந்தார். ஒருநாளிலே 20 மணிநேரம் அங்கேயே உட்கார்ந்து ஆகாயத்தையே பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

மனைவி, அவரிடம் போய் சாப்பிடக் கூப்பிடுகின்றார். அதுகூட அவர் காதிலே விழவில்லை. என்ன ஆகிவிட்டது இவருக்கு? அந்த அம்மாவுக்குக் கவலையாகிப் போய்விட்டது. 1895, நவம்பர் 8 ஆம் திகதி அன்றைக்கும் மாலையில் இருந்து அந்த ஆராய்ச்சி சாலையில் அவர் மட்டும் தான் இருக்கின்றார். உதவியாளர்களெல்லாம் கூட வீட்டுக்குப் போய்விட்டார்கள். ஒரு வெற்றிடக் கண்ணாடிக் குழாயில் மின்சாரத்தைச் செலுத்தி இவர் என்னமோ செய்து கொண்டிருந்தார். அந்தக் கண்ணாடிக் குழாயிலே கறுப்புத் தாளை சுற்றியிருந்தார். வெளிச்சம் வெளியே வராமல் இருக்க அறையில் இருந்த விளக்குகளையும் அணைத்துவிட்டார். இப்பொழுது அந்த வெற்றிடக் குழாய்க்குள்ளே மின்சாரத்தை செலுத்தினார்.

வெளிச்சத் தடுப்புக்காகச் சுற்றியிருந்த கறுப்பு காகிதம் தானாக ஒளிவிட ஆரம்பித்தது.

பேரியம் பிளாட்டினோ சயனேட் என்கின்ற இரசாயனம் தோய்க்கப்பட்ட காகிதம் அது. ஒளிக்கற்றையின் புலனாகாத கதிர்களைக் காட்டக் கூடியது அந்த இரசாயனம். கறுப்புக் காகிதத்தால் மூடப்பட்ட குழாயிலிருந்து புலனாகாத மர்மக் கதிர்கள் வெளியே வருகின்றது புரிந்தது. உலகத்திற்கு ஒரு மகத்தான கண்டுபிடிப்பு கிடைத்தது. அதுதான் எக்ஸ்ரே அதைக் கண்டு பிடித்த விஞ்ஞானி ராண்ட்ஜன். முழுப் பெயர் வில்ஹெம் கான்ராட் ராண்ட்ஜன். ஜேர்மானிய விஞ்ஞானி. அந்தக் கதிர்களின் தன்மைகளை ஆராய்ச்சி செய்தார். பிளாட்டினம், ஈயம் தவிர ஏனைய எல்லா பொருட்களையும் இந்தக் கதிர் ஊடுருவிச் செல்லக் கூடியது என்பது புரிந்தது.

இந்தக் கதிரை தனது கையிலே ஊடுருவச் செய்து அதை ஒரு போட்டோ தகட்டிலே பதிவு செய்தார். கை எலும்புகள் துல்லியமாக தெரிந்தது. மனைவியின் கைகளை எக்ஸ்ரே கதிர்கள் மூலமாக படம் எடுத்தார். மனைவியின் கை எலும்புகளோடு திருமண மோதிரமும் அதிலே தெரிந்தது.

மருத்துவ உலகிலும் தொழில் துறையிலும் இந்தக் கண்டுபிடிப்பு ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. ஆரம்பத்திலே அவரை எல்லோரும் கொஞ்சம் அலட்சியமாகத்தான் பார்த்தார்கள். எக்ஸ்ரே கண்டு பிடிப்பிற்குப் பிறகு தான் அவர் எப்படிப்பட்டவர் என்பதை எல்லோரும் புரிந்து கொண்டார்கள்.

ஜேர்மனியின் பேரரசர் கெய்சர். அவர் முன்னிலையில் ராண்ட்ஜன் எக்ஸ்ரேயை இயக்கிக் காட்டினார். அந்த மன்னருக்கு இடது தோளிலே ஒரு கோளாறு. அதைப் படம் எடுத்துக் காட்டினார். கோளாறு என்பது புரிந்தது. சிகிச்சை சுலபமாகியது.

எக்ஸ்ரே கண்டுபிடித்த பொழுது மக்களுக்கு ஒரு பக்கம் வியப்பு... இன்னொரு பக்கம் பயம்... ஆடைகளை ஊடுருவிப் பார்க்கக் கூடிய கண்டு பிடிப்பு இது என்று செய்திகள் பரவ ஆரம்பித்தன. அதனால் எல்லோரும் வெளியிலே நடமாடவே பயந்தார்கள்.

அது எந்த அளவுக்கு ஆகிவிட்டது தெரியுமா? சில துணி வியாபாரக் கம்பனிகள் விளம்பரம் கொடுத்தார்களாம். எங்கள் கம்பனி உள்ளாடைகள் பாதுகாப்பானவை. எக்ஸ்ரே கதிர்களால் துளைக்க முடியாதபடி இவை உருவாக்கப்பட்டுள்ளன என்ற வதந்திகள் மக்களை மிகவும் குழப்பி விட்டன. அந்தக் காலத்திலேயெல்லாம் இசை நாட்டிய நிகழ்ச்சிகள் அதிகம். இன்றைக்கு சினிமா மாதிரி. இந்த ஆபரா நிகழ்ச்சிகளுக்காக பெரிய அரங்குகளெல்லாம் உண்டு. கடைசி வரிசையில் இருக்கின்றவர்கள் தொலைநோக்கிக் கண்ணாடி வைத்துக் கொண்டு பார்ப்பார்களாம். ஆபரா கிளாஸ் என்றே அதற்குப் பெயர்.

எக்ஸ்ரே ஏற்படுத்தின வதந்தியாலே நிகழ்ச்சி நடத்துகின்ற கலைஞர்கள் கலவரப்பட்டுப் போய்விட்டார்களாம். அமெரிக்காவிலே ஒரு மாகாணத்திலே விசித்திரமாக ஒரு சட்டம் போட்டார்களாம். இனி ஆபரா அரங்குகளில் எக்ஸ்ரே கதிர் உள்ள தொலைநோக்குக் கண்ணாடிகளைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்படுகின்றது. இதுதான் சட்டம்.

இப்படிப்பட்ட கண்ணாடி செய்ய சாத்தியமா என்பது தெரியாமல் சட்டம் இயற்றினார்கள் என்றால் அது மிகவும் ஆச்சரியமாகத்தான் இருக்கின்றது.

அது இருக்கட்டும் இப்பொழுது எக்ஸ்ரே எதுக்கெல்லாம் உபயோகப்படுகின்றது தெரியுமா?

ஒரு இளைஞன் டாக்டரிடம் போனான். டாக்டர் நான் உங்களுடன் படித்த வெங்கட் ராமனுடைய மகன். எங்கள் அப்பா தான் உங்களிடம் அனுப்பினார்.. எனக்கு நெஞ்சு வலி என்றார். மிகவும் சந்தோசம். உங்கள் அப்பா எனக்கு பால்ய சிநேகிதம்...எப்படியிருக்கின்றான். சரி.. நீ போய் ஒரு எக்ஸ்ரே எடுத்துக் கொண்டு நாளைக்கு வா என்றுவிட்டார். இவன் போனான். எக்ஸ்ரே எடுத்துக் கொண்டான். மறுநாள் போனான். டாக்டர் பார்த்தார். அவருக்கு ஞாபகம் வரவில்லை. பேசாமல் இருந்தார்.

டாக்டர் நான் நேற்றைக்கு வந்தேன். நீங்கள் தானே எக்ஸ்ரே எடுத்துக் கொண்டு வரச் சொன்னீர்கள் என்றான்.

அப்படியா சொன்னேன்.. சரி படத்தைக்கொடு பார்க்கலாம் என்று வாங்கினார். எக்ஸ்ரே படத்தை வாங்கி வெளிச்சத்திற்கு முன்னாடி வைத்து உற்றுப் பார்த்தார். எலும்புக் கூடு தெளிவாகத் தெரிந்தது. அதற்குப் பின்பு தான் அவருக்கு ஞாபகம் வந்தது அடடே நீ வெங்கட்ராமன் பிள்ளையாடா..வா..வா.. வந்து உட்காரு என்றார்.



# சிறுவர் அரங்கம்

## சிங்கம்- அசிங்கம்



நரிசிங்கத்திடம்சிங்கத்தின் வாயில் உள்ள மானைதன்னிடம்கொடுத்து விட்டு திரும்பிப் பார்க்காமல் ஓடி விடுமாறு கூறியது.

இல்லாவிட்டால் தான் சிங்கத்தை அடித்தேகொன்று விடுவதாக மிரட்டியது.

சிங்கத்தின் வாயில் கவ்விக் கொண்டிருக்கும் மானை பிடித்து இழுத்தது.

சிங்கம் ஏற்கனவே பசியில் வேறு இருந்தது. தான்கஷ்டப்பட்டு வேட்டையாடி விட்டு தனக்காக கொண்டு வரும் இரையை மற்றொருவர் அபகரிக்க நினைப்பதால் அது இவ்வளவு நாட்கள் காத்த தன்னுடைய பொறுமையை இழந்து விட்டது.

கவ்வியிருந்த மானை கீழே வைத்து விட்டு மிகக்கடுமையான கோபத்துடன் நரியை பிடித்து இழுத்து அதை இரண்டே அடியில் அதனுடைய உடலை இரண்டாக கிழித்து எறிந்து விட்டது.


இவற்றை எல்லாம் மரத்தடியில்நின்று பார்த்துக் கொண்டிருந்த புலி, ஓநாய், கரடி, சிறுத்தை ஆகியோர் அங்கிருந்து நாங்கள் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடி மறைந்து விட்டனர்.

சிங்கம் மானை தன்னுடைய வாயில் கவ்வி தன்னுடைய குகையை நோக்கி கம்பீரமாக நடந்து சென்றது. சிங்கம்சொன்னதைதவறாக எடுத்துக் கொண்ட நரி சிங்கத்திடம்வாலாட்டி தன்னுடைய முடிவை தானே தேடிக் கொண்டது.

நரிக்கும் மற்ற மிருகங்களுக்கும் தெரியாமல் போய் விட்டது, சிங்கத்தின் வீரமும் பலமும் எப்பொழுதும் அதை விட்டுப் போகாதென்று.

(முற்றும்)

# மகாபாரதம்




இதை எடுத்துரைத்த பீஷ்மர் சுற்றந் தழுவுதலின் மேன்மையைத்தருமருக்கு உணர்த்தினார். இதன் மூலம் குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என உலகிற்கு உணர்த்தப்பட்டது.

### கடினமான துன்பங்களைக் கடக்கும் வழி

தருமர் "கடினமான துன்பங்களைக் கடப்பது எப்படி?" என பீஷ்மரிடம் வினவ பீஷ்மர் உரைக்கிறார்.

"யார் மன அடக்கமாய் அறநூலில்சொன்னபடி நடக்கிறாரோ அவர்கடினமான துன்பங்களைக் கடக்கிறார்.

யார்தருமத்தை ஆடம்பரத்திற்காகச்செய்யாமல் தம் தேவையைக் குறைத்துக் கொண்டு வாழ்கின்றாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கிறார்.

யார் ஐம்புலன்களை அடக்கும் வல்லமை பெற்றவரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார் தன்னை பிறர் நிந்தித்தாலும் மறுமொழி கூறாமல் இருக்கின்றாரோ, தமக்குத் துன்பம் செய்தாலும், பிறருக்குத்துன்பம்செய்யாமல் இருக்கின்றாரோ, யார்பிறருக்குக் கொடுத்துக் கொண்டும் தான் யாரிடமும் யாசிக்காமலும் இருக்கின்றாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார் விருந்தினரை நன்கு உபசரிக்கின்றாரோ, யார் வேதம் ஓதுகின்றாரோ, யார் எதற்கும் அருவருப்பு அடையாமல் இருக்கின்றாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார்தருமத்தை உணர்ந்து தாய்,தந்தையைப் போற்றுகின்றாரோயார் பகலில் உறங்காமல் இருக்கின்றாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார் மனத்தாலும் சொல்லாலும் செயலாலும்பாவத்தை செய்யாமல் இருக்கின்றாரோ, உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் இருக்கின்றாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார் பிறர் பொருளைக் கவராமல் இருக்கின்றாரோ அவர்கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார் தன் மனைவியிடம்மட்டும்உரிய காலத்தில் சேர்க்கைக் கொண்டு, பிறர் மனைவியைக் கனவிலும் கருதாமல் இருக்கின்றாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

(தொடரும்)

நல்ல காரியங்களைச் செய்ய ஒருபோதும் பயப்படாதீர்கள்! தாமதமின்றி உடனே நல்ல காரியங்களைச் செய்யுங்கள்!

– தெப்போலியன் ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பின்னணியில் இருந்தது யார் என்பதை அவைத் தலைவர் பகிரங்கப்படுத்த வேண்டும்

வடக்கு மாகாண சபை அரசு இயங்கிய போது அதன் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் யார் யார் அதன் பின்னணியில் இருந்தார்கள் என்பதும் வடக்கு மாகாண சபை நிர்வாகத்தை யார் யார் குழப்பினார்கள் என்ற விபரங்களும் எனக்குத் தெரியும்.

ஆனால் கட்சியின் நலன்கருதி அவற்றை வெளிவிடாமல் இருக்கின்றேன் என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கூறியுள்ளார்.

வடக்கு மாகாண சபையைக் குழப்புவதில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தீவிர கவனம் செலுத்தியிருந்தார் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் கூறியிருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கூறிய மேற்படி விடயம் தொடர்பில் அவைத் தலைவர் சிவஞானம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி, தனது நிலைப்பாட்டைக் கூறியிருந்தர்.

அதில் முதலமைச்சருக்குஎதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஏலவே தயாரிக்கப்பட்டு தன்னிடம் திணித்து தன்னைப் பலிக்கடாவாக்கியதாகவும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பின்னணியில் யார் யாரெல்லாம் இருந்தார்கள் என்பது பற்றித் தனக்குத் தெரியும் என்றும் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் கூறியுள்ளார்.

ஆக, பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மற்றும் அவைத் தலைவர் சிவஞானம் ஆகியோர் முன்வைத்த விடயங்கள் தமிழர் அரசியலில் மிக முக்கியமானவையாயினும் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக அவை அமிழ்ந்து போயின.

மாறாக, வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒரு திட்டமிட்ட சதி என்பதும் அதனூடாகத் தமிழ் மக்களுக்கும் தமிழ் இனத்துக்கும் தமிழ் அரசியல்வாதிகள் துரோகத்தனம் இழைத்தனர் என்பதும் உறுதியாகியுள்ளது.

பரவாயில்லை, காலம்கடந்தேனும் உண்மை வெளிப்பட்டுள்ளது. அந்த உண்மை வெளிப்படுவதற்கு உதவிய பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அவர்களுக்கு தமிழ் மக்கள் நன்றி கூறிக் கொள்வர்.

தவிர, தன்னைப் பலிக்கடாவாக்கி விட்டார்கள் என்று ஆதங்கப்படும் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அவர்கள் உண்மை நிலையை தமிழ் மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்த வேண்டும்.

இல்லையென்றால், முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஓர் அவைத் தலைவர் ஆளுநரிடம் கையளித்தார் என்ற குற்றச்சாட்டு, தமிழர் அரசியலின் பிழைகளைச் சுட்டிக்காட்டுவதற்கான ஓர் உதாரணமாக அமைவதைத் தடுக்க முடியாமல் போகும்.

# நாட்டை தொடர்ந்து முடக்கினால் மக்கள் பட்டினியால் மரணிப்பார்கள்

## அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன

(கொழும்பு)

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தை குறிப்பிட்டுக் கொண்டு நாட்டை தொடர்ந்து முடக்கினால் மக்கள் பட்டினியால் மரணிக்கும் நிலை ஏற்படும். எவ்வாறாயினும் விரைவில் நாடு வழமை நிலைக்குத் திரும்ப வேண்டும்.

கோவிட் தாக்கத்துடன் வாழ மக்கள் பழகிக்கொள்ள வேண்டும் என துறைமுகம் மற்றும் கப்பற்துறை அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கோவிட்-19 வைரஸ் தாக்கத்திலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாக்க அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்து பொறுப்புடன் செயற்பட்டுள்ளது.

கோவிட்-19 இரு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியைக் கடந்துள்ளது.

20 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டோருக்கு கோவிட்-19 தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. தடுப்பூசி செலுத்தும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னிலை வகிக்கிறது. கோவிட் -19 தடுப்பூசி செலுத்தும் பணிகளை வெகு விரைவில் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றார். (ம-3)

# வவுனியாவில் மேலும் 64 பேருக்கு கோவிட்

(வவுனியா)

வவுனியாவில் மேலும் 64 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் 64 பேருக்கு கோவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றாளர்களை கோவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ம-3,250,299)

# புத்தளத்தை சேர்ந்த மீனவர் மன்னாரில் சடலமாக மீட்பு

(மன்னார்)

புத்தளம் கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்று காணாமல்போன மீனவர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிலாவத்துறை சவேரியார்புரம் கடற்கரையிலிருந்து சுமார் 500 மீற்றர் தொலைவில் கடலில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக கண்டுபிடிக்கப்பட்ட மீனவர் புத்தளம் வத்தளங்குன்று பகுதியைச் சேர்ந்த இராமையா ஜேசுதாசன் (வயது-47) எனத் தெரிய வந்துள்ளது.

சிலாவத்துறை பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை மீன் பிடிக்க கடலுக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது சடலம் ஒன்று கடலில் மிதப்பதைப் கண்ட நிலையில் சிலாவத்துறை கடற்படையினருக்கு தகவல் வழங்கினர். கடற்படையினர் மீனவர்களின் உதவியுடன் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் குறித்த சடலத்தை மீட்டு கரைக்கு கொண்டுவந்தனர்.

இதன்போதே சடலமாக மீட்கப்பட்டவர் புத்தளம் கடற்பரப்பில் மீன் பிடிக்கச் சென்று காணாமல்போன மீனவர் எனத் தெரிய வந்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி குறித்த மீனவர் புத்தளம் கடற்பரப்பிலிருந்து மீன் பிடிக்க கடலுக்குச் சென்ற நிலையிலேயே காணாமற்போயுள்ளார். இந்த நிலையிலேயே இரு தினங்கள் கழிந்த நிலையில் நேற்றைய தினம் சடலமாக மீட்கப்பட்டார்.

(ம-3,285)

## மருத்துவக் குறிப்பு

உலர்ந்த வேப்பம் விதைகளின் உள்ளிருக்கும் பருப்பை நசுக்கி வெல்லத்துடன் சாப்பிட்டு வர மூலவியாதி குணமாகும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



## ஒழுக்கத்தின் இலக்கணம்

❖ கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிர வேறு ஒரு கடவுள் உலகில் இல்லை.

❖ இரசாயனத்தைக் கற்பவன் இயற்கை என்னும் புத்தகத்தைப் படித்தறிவது போல, ஆன்மிகத்தைக் கற்பதற்கு படிக்க வேண்டிய நூல் மனித மனம்.

❖ எல்லையில்லாத சக்திசுருள் சுருளாக இந்தச் சிறிய மனித உடலுக்குள் சுருட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சக்தியை உணர முயல்வது தான் ஆன்மிகம்.

❖ சமயம் சார்ந்த தத்துவ உண்மைகளை மூளையில் ஏற்றிகொண்டு குழப்பிக் கொள்ள வேண்டாம். உறுதிபிறழாத ஒழுக்கமே ஆன்மிகத்தின் அடிப்படை.

❖ சுயநலம் ஒழுக்கக்கேடு. சுயநலமின்மையே நல்லொழுக்கம். இது தான் ஒழுக்கத்திற்கு கொடுக்கக்கூடிய ஒரே இலக்கணம்.

❖ மனதிற்கோ, உடலுக்கோ பலவீனத்தை உண்டாக்கும் எதையும் கைவிரலாலும் தீண்டக்கூடாது. பலமே வாழ்வு. பலவீனமே மரணம்.

❖ கடவுளுக்குச் சமமான ஆற்றல் சாத்தானுக்கும் உண்டு. ஆனால், கடவுளுக்குச் சுயநலம் கிடையாது.

# மாகாண சபைத் தேர்தல்கள்

25

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



### வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் -2008

வடமத்திய மற்றும் சப்ரகமுவ ஆகிய இரண்டு மாகாண சபைகளும் அவற்றின் ஆளுநர்களினால் அரசியலமைப்பின் 154ஆ(8) உறுப்புரையின் கீழ் கலைக்கப்பட்டன. இவ் வறிவித்தல்கள் முறையே 1553/6 மற்றும் 1553/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. இதன் விபரம் அட்டவணை 13இல் தரப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளரினால் 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்கள் 2008.06.13 ஆம் திகதிய 1553/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

வேட்புமனுக்களைக் கையேற்கும் காலக்கெடு 2008.06.27 ஆம் திகதி முதல் 2008.07.04 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரையென நிர்ணயிக்கப்பட்டது.

அட்டவணை 13

| மாகாண சபை | வாக்கெடுப்பு நடத்தப்பட்ட திகதி | மாகாணசபையின் முதலாம் கூட்டத் திகதி | பதவிக்காலம் முடிவடையவிருந்த திகதி | கலைக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|
| வடமத்திய | 2004.07.10 | 2004.08.11 | 2009.08.10 | 2008.06.09 |
| சப்ரகமுவ | 2004.07.10 | 2004.08.09 | 2009.08.08 | 2008.06.09 |

இரண்டு மாகாண சபைகளும் கலைக்கப்பட்டதன் செல்லுபடியான தன்மையை சவாலுக்குட்படுத்தி 2008.06.13 ஆம் திகதி இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அநுராதபுரம், கொடகே மாவத்தை, இல. 621/4 இல் வதிகின்ற ஏ.எம். ரம்பண்டா அபேசிங்க மற்றும் தம்மென்னாவெவ, இல. 110/2 ஐச் சேர்ந்த எச்.எம்.ஏ. ரத்நாயக்க ஆகியோர் SCFR222/2008 ஆம் இலக்க மனுவினூடாக வடமத்திய மாகாணம் தொடர்பாகவும், இரத்தினபுரி, கொழும்பு வீதி இல. 39/5 இல் வதிகின்ற ஏ.ஏ.எஸ். விஜேதுங்க மற்றும் எட்டியாந்தோட்டை பிரான்சிஸ் பெரேரா மாவத்தையில் வதிகின்ற கே.எஸ்.எஸ். பெரேரா ஆகியோர் SCFR223/2008 ஆம் இலக்க மனுவினூடாக சப்ரகமுவ மாகாணம் தொடர்பாகவும் இம் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். இரண்டு மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன.

இரண்டு மாகாணங்களின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை (I), ஒவ்வொரு மாவட்டம் சார்பாகவும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை (II), மற்றும் பெயர் குறித்து நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை (III) என்பன அட்டவணை 13A இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 13A வடமத்திய,
சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்கள்-2008

| மாவட்டம் | I | II | III |
|---|---|---|---|
| அநுராதபுரம் | 569,398 | 21 | 24 |
| பொலநறுவை | 277,056 | 10 | 13 |
| இரத்தினபுரி | 713,205 | 24 | 27 |
| கேகாலை | 605,621 | 18 | 21 |

வேட்புமனுக்களைக் கையேற்றல் முடிவடைந்ததன் பின்னர், அநுராதபுர மாவட்டத்தில் 12 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 7 சுயேச்சைக் குழுக்கள் என்பனவும், பொலநறுவை மாவட்டத்தில் 10 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 8 சுயேச்சைக் குழுக்கள் என்பனவும், இரத்தினபுரி மாவட்டத்தில் 12 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 9 சுயேச்சைக் குழுக்கள் என்பனவும், கேகாலை மாவட்டத்தில் 11 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 10 சுயேச்சைக் குழுக்கள் என்பனவும் போட்டியில் குதித்தன. அநுராதபுர மாவட்டத்தில் அரசியல் கட்சிகளிலிருந்து போட்டியிட முன்வந்த வேட்பாளர்கள் 288 பேர்களும் சுயேச்சைக் குழுக்களிலிருந்து 168 பேர்களும் காணப்பட்டனர். பொலநறுவை மாவட்டத்தில் அரசியல் கட்சிகளிலிருந்து போட்டியிட முன்வந்த வேட்பாளர்கள் 130 பேரும் சுயேச்சைக் குழுக்களிலிருந்து 104 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் அரசியல் கட்சிகளிலிருந்து போட்டியிட முன்வந்த வேட்பாளர்கள் 324 பேரும் சுயேச்சைக் குழுக்களிலிருந்து 243 பேரும், கேகாலை மாவட்டத்தில் அரசியல் கட்சிகளிலிருந்து போட்டியிட முன்வந்த வேட்பாளர்கள் 231 பேர்களும் சுயேச்சைக் குழுக்களிலிருந்து 210 பேருமாக மொத்தம் 1698 பேர் காணப்பட்டனர்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மூன்றின் வேட்புமனுக்கள் ஒவ்வொன்று வீதம் அநுராதபுரம், பொலநறுவை, கேகாலை ஆகிய மாவட்டங்களிலும் சுயேச்சைக் குழுவொன்றின் ஒரு வேட்புமனு அநுராதபுர மாவட்டத்திலும் இரண்டு வேட்புமனுக்கள் இரத்தினபுரி மாவட்டத்திலும் மற்றொரு வேட்புமனு கேகாலை மாவட்டத்திலும் நிராகரிக்கப்பட்டன.

வேட்புமனு கையேற்பு நடவடிக்கைகளின் ஈற்றில் வாக்கெடுப்பு நடத்தப்படுகின்ற திகதி 2008.08.23 என தெரிவத்தாட்சி அலுவலர்களால் பிரகடனப்படுத்தப்பட்டது.

வாக்கெடுப்புக்கள், வடமத்திய மாகாணத்தின் 758 வாக்கெடுப்பு நிலையங்களிலும் மற்றும் சப்ரகமுவ மாகாணத்தின் ஆயிரத்து 14 வாக்கெடுப்பு நிலையங்களிலும் 2008.08.23 ஆம் திகதி நடைபெற்றன.

### தேர்தல்கள் கண்காணிப்பாளர்களுக்கு விசேட அனுமதி

தேர்தல்கள் ஆணையாளரின் அனுமதியோடு இரண்டு அமைப்புக்கள் வாக்கெடுப்பு நடவடிக்கைகளை கண்காணித்ததோடு, அவர்களின் கண்காணிப்பாளர்களுக்கு வாக்களிப்பு நிலையத்துக்குள் தரித்திருந்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட அவகாசம் அளிக்கப்பட்டது. இவ்வாறு கண்காணிப்பு நடவடிக்கைகளில் நீதியானதும் அமைதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) மற்றும் தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையம் (CMEV) ஆகிய அமைப்புக்கள் ஈடுபட்டன. இன்னும் சில அமைப்புகள் வாக்களிப்பு நிலையத்துக்குள் உட்பிரவேசிக்காமல் வாக்கெடுப்பு நடவடிக்கைகளை கண்காணித்தன.

வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெற எதிர்பார்க்கப்பட்ட ஊழல்கள், வன்முறைகள் மற்றும் ஏனைய நிகழ்வுகள் தொடர்பான முறைப்பாடுகளைப் பெற்றுக் கொண்டு அவை தொடர்பாக உடனடியாக செயற்படவும் வாக்களிப்பு நிலையங்களில் செயல்முறை தொடர்பாக அக்கறையோடு நடந்து கொள்ளவும் மாவட்டங்களில் பல இடங்களில் இணைப்பு நிலையங்கள் முதன் முறையாக இத்தேர்தலின்போது நிறுவப்பட்டன.

வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னர், முக்கியமாக அநுராதபுர மாவட்டத்தில் பாரதூரமான வன் முறைச் செயல்கள் நிகழ்ந்ததாக அறிவிக்கப்பட்டபோதிலும், வாக்கெடுப்புத் தினத்தில் வன்முறைகள் அல்லது இடையூறுகள் எவையுமின்றி தேர்தல்கள் நடந்து முடிந்தன.

அதாவது வாக்கெடுப்பு நிலையங்களில் முறையற்ற நடத்தைகள் எவையும் நிகழ்ந்ததாக வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களோ, உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களோ, பொலிஸ் அலுவலர்களோ அல்லது கண்காணிப்பாளர்களோ அறிவித்திருக்கவில்லை. வாக்கெண்ணல் நிலையங்கள் அநுராதபுரம் 48, பொலநறுவை 24, இரத்தினபுரி 50, கேகாலை 48 , மொத்தமாக 170 ஆகக் காணப்பட்டன.

வடமத்திய மாகாண சபைக்கு ஐக்கிய மக்கள்சுதந்திரக் கூட்டணி, ஐக்கிய தேசியக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தேசிய காங்கிரஸ், ஐக்கிய சோசலிச கட்சி, ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு, இடதுசாரி முன்னணி, தேசிய மக்கள் கட்சி, ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி, சிங்களயே மஹ சம்மத பூமிபுத்ர பக்சய, ருஹுனு ஜனதா பக்சய, முஸ்லிம் விடுதலை முன்னணி, சுயேச்சை குழு ஆகியன போட்டியிட்டன.

(தொடரும்...)

## 131 பேர்...

இடம்பெற்றுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதில் 73 ஆண்களும் 58 பெண்களும் உயிரிழந்துள்ளனர்.

இதன் அடிப்படையில், 10 ஆயிரத்து 995 பேர் இதுவரையில் கொரோனாத் தொற்றினால் இலங்கையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஒரு வயது...

சாலையில் காய்ச்சல் காரணமாக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட ஒரு வயதான குழந்தை உயிரிழந்துள்ள நிலையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக சுகாதாரப் பிரிவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெல்லிப்பழை பெரியபுலம் பகுதியைச் சேர்ந்த ஒரு வயதான குழந்தை காய்ச்சல் காரணமாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தைக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் சோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,33)

## மயங்கி விழுந்த...

டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

மீசாலை கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 48 வயதான நேசம்மா என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் பிசிஆர் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (ம-3,30)

## +2,882...

வத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் புதுவருட கோவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதன்படி, இந்நாட்டு மொத்த கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 480, 468 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை பூரணமாகக் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 409, 628 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## இரட்டைக்...

பெண்ணே இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.

குழந்தைகள் இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர்.

"கடந்த 4ஆம் திகதி கர்ப்பவதிப் பெண்ணுக்கு மூச்செடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. அதனால் அவர் அன்றைய தினம் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எனினும் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். அன்றைய தினமே அவருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து எட்டு மாத கர்ப்பவதிப் பெண்ணுக்கு சிசேரியன் மூலம் கடந்த புதன்கிழமை ஆண் குழந்தை ஒன்றும் பெண் குழந்தை ஒன்றுமாக இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன.

அதன்பின்னர் தாயாருக்கான சிகிச்சைகள் தொடர்ந்த நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்" என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் முன்னெடுத்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சுகாதார முறைப்படி தகனம் செய்ய அனுமதிக்கப்பட்டது.

உயிரிழந்த பெண்ணின் கணவனும் அவரது குடும்பத்தினரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,33)

## 21ஆம் திகதி...

முன்னேற்றம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது பிரதானமாகக் கலந்துரையாடப்பட்டது.

இரண்டாம் அலைத் தடுப்பூசிக்காகத் தேவைப்படும் ஸ்பூட்னிக் (Sputnik) தடுப்பூசிகள் ஒரு இலட்சத்து இருபதாயிரம் அடுத்த வாரத்துக்குள் கிடைக்கவுள்ளதாக கோவிட் ஒழிப்புச் செயலணியின் உறுப்பினரும் விசேட வைத்திய நிபுணருமான பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

கோவிட் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களில் பெருமளவானோர், 60 வயதுக்கு மேற்பட்டோர் என்றும் இவர்களின் அதிகமானோர், முதல் அலைத் தடுப்பூசியைக்கூட ஏற்றாதவர்கள் என்றும் சுகாதார அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

அதனால், நடமாடும் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்குமாறும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வருகை தராத 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் நோய்களால் பீடிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாகத் தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். அத்துடன், தடுப்பூசி ஏற்றுவதிலிருந்து பின்வாங்கும் நபர்களை தடுப்பூசி ஏற்றல் தொடர்பில் ஊக்குவிக்குமாறும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தங்களுடைய உற்பத்திகளைச் சந்தைக்கு விநியோகிக்க முடியாமல் மரக்கறி வியாபாரிகள் பெரும் அசௌகரியத்துக்கு ஆளாகி உள்ளனர்.

அதனால், நாட்டிலுள்ள அனைத்துப் பொருளாதார மத்திய நிலையங்களையும் தொடர்ந்து திறந்து வைப்பது தொடர்பிலும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. (ம-3)

## நாட்டை...

நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கூடிய கோவிட் செயலணிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நேற்று நடைபெற்ற கோவிட் செயலணிக் கூட்டத்தில் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தினை எதிர்வரும் 21ஆம் திகதிவரை நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது 21ஆம் திகதியின் பின்னரான காலப்பகுதியில் நாட்டைத் திறப்பதாக இருந்தால், அதன் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய கட்டுப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி இதன்போது பணிப்புரை விடுத்தார் என சவேந்திர சில்வா தெரிவித்தார். (ம-3)

## வடக்கில் ...

செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை, வடக்கு மாகாணத்தில் 199 பேரின் மாதிரிகளை ஆய்வுக்குட்படுத்தியபோது 113 பேர் டெல்டா திரிபினாலும் 10 பேர் அல்பா திரிபினாலும் பாதிக்கப்பட்டமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் நுண் உயிரியல் துறையினால் எடுக்கப்பட்ட மாதிரிகளின் பகுப்பாய்வில் இது தெரியவந்துள்ளது.

பேராசிரியர் நீலிகா மாளவிகே மற்றும் மருத்துவர் சந்திம ஜீவந்தர ஆகியோரால் ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

ஒவ்வொரு மாகாணத்திலும் டெல்டா வைரஸ் திரிபு 84 முதல் 100 சதவிகிதம் வரை பரவியிருப்பதும் தெரியவந்துள்ளது.

பகுப்பாய்வு செய்யப்பட்ட 881 பேரின் மாதிரிகளில் 592 பேருக்கு டெல்டா வைரஸ் பாதிப்பு உள்ளமை தெரியவந்துள்ளது. (ம-3)

## ஐ. நாவுக்கு...

கள் தொடர்பிலும் நாங்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்வதாக இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் போர்க் குற்றம் நடைபெற்றது, இன அழிப்பு நடைபெற்றது என்பது தெட்டத் தெளிவான உண்மை.

அதாவது இன்று காணாமல்போனோர் பற்றியோ அல்லது நில ஆக்கிரமிப்புக்கள் பற்றியோ இன்று எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை என்றும் தமிழர்கள் அடக்கி ஆளப்படுகின்ற ஒரு நிலையே இங்கு காணப்படுகின்றது.

ஐ.நாவுக்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பில் பல்வேறு விமர்சனங்களும் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான ரெலோ அமைப்பினூடாக தங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் தாங்கள் எந்த கையொப்பமும் இடவில்லை.

அதேபோல சுமந்திரன், மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைத்த கடிதத்தில் இரு தரப்பும் போர்க் குற்றத்தில் ஈடுபட்டவர்கள் என்ற விடயம் உள்ளடக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தினால் அது பற்றி நாங்கள் ஆராய வேண்டும் என்றும் காரணம், இதில் ஒரு தரப்பு களத்தில் இல்லை. மற்றைய தரப்பான அரசு இந்த நாட்டினுடைய இறைமையுள்ள அரசை நடத்துகின்ற ஒரு அரசாங்கம் தன் குடிமக்கள் மீது போர் குற்றத்தை நடத்தியுள்ளது. குண்டுகளை வீசி மக்களை படுகொலை செய்திருக்கிறது.

பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் மக்களை அழைத்து அதற்குள் குண்டு போட்டுக் கொலை செய்துள்ளது. இது ஒரு இன அழிப்பு. இன அழிப்புப் போர்க் குற்றம் புரிந்திருந்தால் அதில் ஒரு தரப்பு இல்லாவிடின் அதனை எவ்வாறு விசாரிப்பது? கண்முன்னே நடந்த இனப் படுகொலைக்கு அதில் குறிப்பிட்ட விடயம் எங்களுக்கு ஒத்துவரக் கூடியதாக இருக்கவில்லை. அதுபற்றி கடந்த திங்கட்கிழமை ஆராயலாம் என தீர்மானித்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை இணைய வழியிலான ஒரு கலந்துரையாடலின் போது, சம்பந்தன் ஐயா குறித்த கடிதத்தை தான் ஒரு தனிமனிதனாக அனுப்பி விட்டார் என்று பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார்.

அவர் அதனை அனுப்பியிருந்தால் நாங்கள் எதனையும் செய்ய முடியாது. காரணம் அவர் சிங்கக் கொடியை பிடித்துவிட்டு காளியின் கொடி என்று சொல்லுவார். மக்கள் அதனை ஏற்றுக் கொள்வார்கள். அவர் பாராளுமன்றத்தில் புலிகள் ஜனநாயகத்தை மதிக்கவில்லை, மனித உரிமை மீறல்களை புரிந்தார்கள். அதனால் அவர்கள் அழிந்தார்கள் என்று பேசுவார். அதையும் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை அவருக்கு உள்ளது.

ஆனால் கடிதத்தை அனுப்பிவிட்டு இரண்டு தரப்பையும் விசாரிக்க வேண்டும் என்றால் எல்லோரும் ஏற்றுக் கொண்டதாக கருத முடியாது.

அவர் அனுப்பி இருக்கின்ற கடிதம் தொடர்பில் நாங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வதாக இல்லை. நாங்கள் இது தொடர்பில் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடி இருக்கின்றோம். பேசி இருக்கிறோம்.

ஆனால் கடந்த 19ஆம் திகதி அனுப்ப வேண்டிய கடிதத்தை நாங்கள் அனுப்ப தவறி இருக்கிறோம். இது எங்களிடம் இருக்கின்ற பெரும் தவறு என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். (ம-3)

## 3 ஆயிரம்...

பிரிவு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் தொலைகாணொளி தொழில்நுட்பம் ஊடாக கோவிட் தடுப்பு செயலணிக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதன்போதே பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, கிராமப்புறங்களில் உள்ள 100க்கும் குறைந்தளவான மாணவர்கள் எண்ணிக்கையைக் கொண்ட 3 ஆயிரம் பாடசாலைகளை முதற்கட்டமாக திறப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பரிந்துரைகளை முன்வைப்பதற்கான பொறுப்பை சுகாதார மற்றும் கல்வித்துறைசார் அதிகாரிகளைக் கொண்ட தொழிநுட்பக் குழு ஒன்றிடம் ஒப்படைக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

2020 மற்றும் 2021 ஆகிய வருடங்களில் பாடசாலைகள் மூடப்பட்டதால், சுமார் 7 இலட்சம் மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியும் அவ்வாறே மேலும் பல மாணவர்களுக்கு முன்பிள்ளை பருவக் கல்வியும் கிடைக்காமல் போனதால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ம-3)

## 13 சிறுவர்கள்...

வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

காரைநகரைச் சேர்ந்த 81 பேரின் பிசிஆர் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. அவற்றில் 34 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அவர்களில் 05, 07, 08, 09, 10, 11, 12, 13, 14, 15 வயதுடைய 13 சிறார்களும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறித்த திருமண நிகழ்வில் பங்கேற்றவர்களை தனிமைப்படுத்தி அவர்களை பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்த முற்பட்டவேளை வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார உத்தியோகத்தர் உட்பட்டவர்களை தாக்க முற்பட்ட குற்றச்சாட்டில் 03 பேர் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# 623 பொருட்களின் இறக்குமதிக்கு தடை என போலிப் பிரசாரம்

## வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன



(கொழும்பு)

இறக்குமதிசெய்யப்படும் 623 பொருட்களை தற்காலிகமாக தடை செய்ய அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை விமர்சித்து எதிர்த் தரப்பினர் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள். இவ் விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவுடன் பகிரங்க விவாதத்தில் ஈடுபட தயாராக உள்ளேன் என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், நல்லாட்சி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட தவறான வெளிநாட்டு கையிருப்பு முகாமைத்துவம், ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தினாலும் கோவிட்-19 வைரஸ் பெருந்தொற்று தாக்கத்தினாலும் வெளிநாட்டு கையிருப்பில் பெரும் பாதிப்பு ஏற்பட்டன.

இவ்வாறான நிலையில் மத்திய வங்கியின் நிதிச்சபை கடனை கட்டுப்படுத்துவதற்காக கடன்பத்திரங்கள் விநியோகிக்கும்போது முறையான திட்டங்களை தற்போது கையாள்கிறது. இறக்குமதி செய்யப்படும் 623 பொருட்கள் முழுமையாகத் தடை செய்யப்படவில்லை. அத்துடன் இறக்குமதி வரியும் அதிகரிக்கப்படாது. இதனால் தேசிய மட்டத்தில் இப்பொருட்களுக்கான தட்டுப்பாடு விலை அதிகரிப்பும் ஏற்படாது.

அனைத்து வங்கி கட்டமைப்பை நிர்வகிப்பதற்கான கடன் முகாமைத்துவமாக மத்திய வங்கி இதனைச் செயற்படுத்தியுள்ளது. அத்துடன் கடன் கட்டுப்பாடு முறைமைகளில் சிறந்த கட்டுப்பாட்டு முறைமைகள் தற்போது பேணப்படுகிறது. இதற்கமைய இந்த 623 பொருட்களுக்காக கடன் பத்திரம் வெளியிடுவதற்கான முழுமையான பெறுமதி வைப்பில் வைக்கப்பட்ட நிலையில் வங்கிகள் கடன் பத்திரங்களை வெளியிடும்.

இதன்நோக்கம் 623 பொருட்கள் இறக்குமதி செய்யும்போது நிதி வெளிச்செல்வதை கட்டுப்படுத்துவதாகும். உதாரணமாக அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி செய்யும்போது வங்கிக் கட்டமைப்பினால் முழு பெறுமதியும் வைப்பிலிடப்படாது.

ஒரு பகுதி மாத்திரம் வைப்பிலிடப்பட்டு, பொருட்கள் கப்பலுக்கு ஏற்றப்பட்டதன் பின்னர் தேவையான ஆவணங்கள் வங்கிகளுக்கு அனுப்பட்டு வங்கியினால் அந்த ஆவணங்கள் வெளியிடுத்தப்பட்டதன் பின்னர்தான் மிகுதித் தொகை செலுத்தப்படும். ஆரம்பத்தில் 25 சதவீதத்தை வைப்பிலிட்டு 623 பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. ஆனால் தற்போது 100 சதவீதத்தையும் முழுமையாக வைப்பிலிட்டு பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் பேராசிரியர் ஹர்ஷ டி சில்வாவுடன் பகிரங்க விவாதத்திற்கு தயார் என்றார். (ம-03)

# வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட மகனைத் தேடியலைந்த தந்தை ஒருவர் மரணம்



(வவுனியா)

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடியலைந்த மற்றொரு தந்தையும் வவுனியா மதியாமடுவில் உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா மதியாமடு, புளியங்குளம் எனும் முகவரியில் வசித்து வந்த செமாலை இராசதுரை (வயது- 73) தனது மகன் பற்றிய உண்மை நிலை ஏதும் அறியாமலேயே புத்திர சோகத்தோடு நேற்று வெள்ளிக்கிழமை காலமானார்.

2009ஆம் ஆண்டு இறுதி யுத்த முடிவின்போது 2009.05.24 அன்று ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத்தினர் இவரது மகனான இராசதுரை விஜி (வயது -34) என்பவரை கைது செய்து குடும்பத்தினரிடமிருந்து தனியாக பிரித்து அழைத்துச் சென்றிருந்த நிலையில் அவர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்.

வவுனியாவில் ஆயிரத்து 668 நாட்கள் கடந்தும் நடைபெற்று வரும் "காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கேட்கும் தொடர் போராட்டத்தில்" தனது முதுமைக் காலத்திலும் செமாலை இராசதுரை அவர்கள் நல்ல தேக ஆரோக்கியத்தோடு தன்னை இணைத்துக் கொண்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார். (ம-03,250,299)

# யாழில் 8 பேர் உட்பட வட மாகாணத்தில் 15 பேர் கொரோனாவால் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் 8 பேர் உட்பட வடக்கில் 15 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற இணுவிலைச் சேர்ந்த 25 வயதுடைய பெண் ஒருவர் இரட்டைக் குழந்தைகளை பிரசவித்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த 60 வயதுடைய பெண் ஒருவரும் பருத்தித்துறையைச் சேர்ந்த 78 வயதுடைய ஆண் ஒருவரும் யாழ்.போதனா மருத்துவமனை விடுதியில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற தொண்டைமானாறு பகுதியைச் சேர்ந்த 83 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த 81 வயதுடைய பெண் ஒருவரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 82 வயதுடைய பெண் ஒருவரும் வீட்டில் உயிரிழந்தனர்.

தெல்லிப்பழையில் ஒரு வயது குழந்தை ஒன்றும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளது.

தென்மராட்சி மீசாலை மேற்குப் பகுதியைச் சேர்ந்த வயோதிபப் பெண் ஒருவர் கொரோனா நோய்த் தாக்கம் காரணமாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு அவரது வீட்டில் உயிரிழந்துள்ளார்.

பேரனுக்கு தொற்று ஏற்பட்ட நிலையில் அவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மூதாட்டியே இவ்வாறு தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். அவரது சடலம் நேற்று வெள்ளிக்கிழமை வீட்டில் இருந்து மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டுள்ளது. மீசாலை மேற்குப் பகுதியைச் சேர்ந்த 76 வயதான வயோதிப் பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சியில் உயிரிழந்த 03 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

79,57 வயது ஆண்களும் 74 வயது பெண்ணுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

வவுனியாவில் கோவிட் தொற்று காரணமாக நேற்று 04 மரணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கோவிட் தொற்றுக் காரணமாக சிகிச்சை பெற்றுவந்த, தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் இருந்தோர் என 04 பேர் கோவிட் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

தோணிக்கல், கூமாங்குளம், மதவுவைத்தகுளம், ஓமந்தை ஆகிய பகுதியினைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கோவிட் தொற்றால் மரணித்தவர்களாவார்கள். (ம-3,30,33,250,299)

# துன்னாலை வேம்படிப் பகுதியில் 30 லீற்றர் கசிப்புடன் பெண் ஒருவர் கைது

(கரணவாய்)

துன்னாலை வேம்படிப்பகுதியில் நெல்லியடி பொலிஸார் மேற்கொண்ட திடீர் முற்றுகையின் போது 30 லிற்றர் கசிப்புடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நெல்லியடி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அப்பகுதியில் உள்ள வீடு ஒன்று முற்றுகையிடப்பட்டது.

இதன்போது 30 லீற்றர் கசிப்பு மற்றும் உற்பத்தி உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-03,60)


வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியிலுள்ள வீடொன்றிற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (7880)

076 997 0578



முதலாம் அண்டு நினைவஞ்சலி

அமரர் செல்வராஜா சிவலிங்கம்

திதி : 11.09.2021



ஆண்டு ஒன்றானாலும்
ஆறவில்லை எம் துயர்
இவ்வுலகில் வாழ்ந்தாலும்
இதயம் மறக்க மறுக்கிறது
உற்றார் பலர் இருந்தாலும்
உறவுகள் சேர்ந்தாலும்
உங்கள் அன்பிற்கீடாகுமா?

தோற்றம் : 15.11.1940
மறைவு : 23.08.2020

அம்மன் வீதி,
திருநெல்வேலி.

(C-2640)

குடும்பத்தினர்


# யாழ்ப்பாணத்தில் 71 பேர் உட்பட வடக்கில் 80 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 71 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 80 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று 250 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-03)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.